மாலை தீப்பொறி
MALAE THEEPORI

CPIML LIBERATION

2023 ஏப்ரல் 1-15 தொகுதி 21 இதழ் 16

விலை ரூ.10 ஆண்டு சந்தா ரூ.200

# தோள் சீலைப் போராட்டத்தின் 200ஆம் ஆண்டு



# வைக்கம் போராட்டத்தின் 100ஆம் ஆண்டு

மோடி அரசின் காவி, கார்ப்பரேட் அடிமைக் கல்விக் கொள்கைக்கு எதிராக...
இந்தித் திணிப்புக்கு எதிராக...
தமிழக, மக்கள் சார், முற்போக்கு, கல்விக் கொள்கைக்காக...
வேலைவாய்ப்பு வழங்கும் வளர்ச்சிக்காக...

# புரட்சிகர இளைஞர் கழகம்-அகில இந்திய மாணவர் கழகம்

**நடத்திய**

## இளைஞர்-மாணவர் மாநில சிறப்பு மாநாடு






*2023 மார்ச் 31 தோழர் சந்திரசேகர் நினைவு நாள் அன்று மதுரை, நீதிபதி கிருஷ்ணய்யர் சமூக கூடத்தில் புரட்சிகர இளைஞர் கழகம் மற்றும் அகில இந்திய மாணவர் கழகத்தின் சார்பாக மாணவர் இளைஞர் சிறப்பு மாநாடு நடைபெற்றது. மாநாட்டிற்கு தோழர்கள் தனவேல், பாலஅமுதன் தலைமை தாங்கினர். தோழர்கள் பெரோஸ் பாபு, உதுமான் அலி. சேலம் சுந்தர்ராஜன் முன்னிலை வகித்தனர். மாநாட்டுக் கொடியை தோழர் மங்கையர்கரசி ஏற்றினார். தோழர் தேவராஜ் வரவேற்புரையாற்றினார். இகக(மாலெ) தமிழ்நாடு மாநிலச் செயலாளர் தோழர் பழ.ஆசைத்தம்பி மாநாட்டை துவக்கி வைத்து உரையாற்றினார். இகக(மாலெ) அரசியல் தலைமைக்குழு உறுப்பினர் தோழர் வீ.சங்கர் சிறப்புரையாற்றினார். மாநாட்டில் குடியாத்தம் கல்லூரி மேனாள் முதல்வர் பேராசிரியர் ப.சிவக்குமார், உயர் கல்வியைக் காப்போம் இயக்கத்தைச் சேர்ந்த பேராசிரியர் இரா.முரளி, சமூக வலைத் தளத்தின் தேசிய ஒருங்கிணைப்பாளர் தோழர் லேகா, புரட்சிகர இளைஞர் கழகத்தின் தேசிய துணைத் தலைவர் எம்.சுந்தர்ராஜ், சிபிஐஎம்எல் மதுரை மாவட்டச் செயலாளர் தோழர் சி.மதிவாணன் ஆகியோர் கருத்துரை வழங்கினார்கள். தோழர் மதன் நன்றி கூறினார்.*






2023 ஏப்ரல் 1-15

மாலெ தீப்பொறி

இருவார இதழ்

தொகுதி 21 இதழ் 16

## உள்ளே


| | |
|---|---|
| இககமாலெயின் 11ஆவது கட்சி காங்கிரஸ் | 4 |
| தோள் சீலை போராட்டம் 200 ஆண்டுகள் | 8 |
| பாசிச இனவெறுப்பு அரசியலை முறியடித்து... | 14 |
| மோடி ஆட்சியில் கட்டவிழ்த்து விடப்படும்... | 16 |
| அனைத்திந்திய நீதிக்கான வழக்கறிஞர் சங்கம் | 18 |
| வைக்கம் போராட்ட நூற்றாண்டிலும் | 22 |


**ஆசிரியர்**

**ஜி.ரமேஷ்**

**ஆசிரியர்குழு**

**பாலசுந்தரம்**

**பழ.ஆசைத்தம்பி**

**அ.சந்திரமோகன்**

**கே.ஜி.தேசிகன்**

**மேலாளர்**

**சொ.இரணியப்பன்**

**இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட் – லெனினிஸ்ட்) தமிழ்நாடு மாநிலக்கமிட்டியின் அரசியல் ஏடு**

1/10, 11ஆவது தெரு,
கருணாநிதி நகர்,
அயனாவரம்,
சென்னை – 600023

**நிர்வாக அலுவலகம்**

3/254பி, ஜீவா தெரு,
வண்டலூர்
சென்னை – 600048

தொலைபேசி : 9443507067
9840340741

malaetheepori@gmail.com
www.tamilnadu.cpiml.net
cpimlthamilnadu.blogspot.com

தலையங்கம்

# ராமர் பெயரால் சங்கிகளின் அட்டூழியங்கள்

தேர்தல் வந்தாலே பாஜக–சங்கிகளின் அட்டூழியங்கள் அதிகமாகத் தொடங்கிவிடும். கர்நாடக மாநிலத்தில் தேர்தல் நடக்கவிருக்கிறது. இஸ்லாமிய ஓட்டுநரை பசுவைக் கடத்தினார் என்று பசுப் பாச பாஜக குண்டர்கள் அடித்தே கொன்றுவிட்டார்கள். கடந்த ஆண்டு ராம நவமியின் போது சிறுபான்மை மக்கள் குறிப்பாக இஸ்லாமியர்கள் வாழுமிடங்கள், பள்ளிவாசல்கள் இருக்குமிடங்களுக்குச் சென்று, கலவரங்கள் செய்து காவிக் கொடியை பள்ளிவாசல்களில் கட்டினார்கள். வாளை ஏந்திக் கொண்டு, இஸ்லாமிய வெறுப்பு முழக்கங்களைக் கத்திக் கொண்டு ஊர்வலம் நடத்தினார்கள். அனுமன் ஜெயந்தியின் போதும் இதுபோன்ற கலவரங்களை கட்டவிழ்த்து விட்டது சங்கிகள் கூட்டம். இவ்வாண்டும் ராம நவமியின் போது இஸ்லாமியர்கள் அதிகம் வாழும் இடங்களில் சங்கிகள் திட்டமிட்டு வன்முறையில் ஈடுபட்டுள்ளார்கள். பாஜக ஆட்சி செய்யும் மாநிலங்களான மகாராஷ்டிரா, குஜராத், உத்தரப்பிரதேசம், கர்நாடகா மட்டுமின்றி, பாஜக ஆட்சியில் இல்லாத மேற்கு வங்கம், பீகார் போன்ற மாநிலங்களிலும் திட்டமிட்டு வன்முறையை அரங்கேற்றியுள்ளார்கள் பாஜகவினர். ராம நவமி முடிந்த பின்னரும்கூட மேற்கு வங்கம் ஹூக்ளி மாவட்டத்தில், பிகார் நாலந்தா மாவட்டத்தில் கலவரங்கள் செய்து இஸ்லாமியர்களின் வீடுகளை, கடைகளை, குறிப்பாக மதராசாக்களைச் சூறையாடி தீ வைத்துக் கொளுத்தியுள்ளார்கள். பிகார் சரீப்பில் உள்ள அஸிஸியா மதராஸா மற்றும் நூலகத்தை சின்னாபின்னமாக்கியிருக்கிறார்கள். 110 ஆண்டுகள் பழைமையான நூலகம் அது. நூலகங்களை குறிவைத்துக் கொளுத்துவது சங்கிகளின் திட்டமிட்ட நடவடிக்கையாகும். பாஜக இப்போது இருக்கும் மிருக பலத்துடன் இல்லாமல் ஆட்சியில் இருந்த காலத்திலும் கூட அவர்கள் திட்டமிட்டு நூலகங்களைக் கொளுத்தியுள்ளார்கள். வாஜ்பாய் ஆட்சி மத்தியில் இருந்தபோது சென்னையில் இந்த ஆர்எஸ்எஸ் கும்பல்கள் பாரதி புத்தகாலயம் புகுந்து, புத்தகங்களை எரித்து நாசப்படுத்தினார்கள். பாசிச சங்கிகளுக்கு தங்களுடைய பசு மூத்திரத்தின் பலன்கள் போன்ற மூடத்தனமான புத்தகங்கள் தவிர வேறு எதையும் மக்கள் படித்துவிடக் கூடாது. அதுவும் பகுத்தறிவு புத்தகங்களை மக்கள் படித்து விடக் கூடாது, அறிவை வளர்த்துக் கொள்ளக் கூடாது என்பதில் மிகத் தெளிவாக இருப்பார்கள். மதராஸாக்கள் பயங்கரவாதிகளின் புகழிடம் என்றும் இஸ்லாமிய பயங்கரவாதம் என்றும் சங்கிகள் பொய்ப் பிரச்சாரம் செய்து மதராஸாக்களை நாசப்படுத்துகிறார்கள். ஆர்எஸ்எஸ் சங்கிகள் மட்டும் கோயில்களில், பள்ளிக் கூடங்களில் சாகா பயிற்சி என்ற பெயரில் ஆயுதப் பயிற்சி எடுப்பார்கள். ஆர்எஸ்எஸ் ஊர்வலங்களில் வெளிப்படையாக கம்பு, வாள் போன்ற ஆயுதங்களை கொண்டு செல்வார்கள். துப்பாக்கிகளைக்கூட தங்கள் ஊர்வலங்களில் எடுத்துச் செல்கிறார்கள். ஆர்எஸ்எஸ் ஊர்வலங்கள் தாண்டி, இந்து மத ஊர்வலங்களை நடத்தும் போதும் ஆயுதங்களுடன் இப்போது செல்கிறார்கள். காவல்துறையினரும் அதைக் கண்டு கொள்வதில்லை. மதவெறியைத் தூண்டி, மக்களைத் துண்டாடி அதன் மூலம் வாக்குகளை பெற்று ஆட்சியைப் பிடிப்பதை ஒரு உத்தியாகவே வைத்துள்ளது பாஜக. 2014 தேர்தலின் போது உத்தரப் பிரதேசம் முசாபர்நகரில் திட்டமிட்டு கலவரம் செய்து இஸ்லாமியர்களைக் கொன்று, இந்துக்கள் வாக்கை வாங்கி ஆட்சிக்கு வந்தார்கள். சமீபத்தில் நடந்த குஜராத் தேர்தலின் போதும் இதே வன்முறைத் திட்டத்தைக் கையாண்டார்கள். அதற்காகவே அமித்ஷா படை பரிவாரங்களுடன் செல்கிறார். மீண்டும் மோடியை ஆட்சியில் அமர வைத்திடுங்கள், எங்கள் ஆட்சி வந்தபின்னர் கலவரக் காரர்கள் தலைகீழாகத் தொங்கவிடப்படுவார்கள் என்று கலவரங்களைத் திட்டமிட்டு உருவாக்கி வாக்கு வாங்கும் அமித் ஷா பேசுகிறார். இவர்களின் கலவரத் திட்டத்தை, மோ(ச)டியை மக்கள் மத்தியில் அம்பலப்படுத்தி வீழ்த்திட வேண்டியது நாட்டு மக்கள் அனைவரின் கடமையாகும். ❑

# இகக(மாலெ)யின் 11வது காங்கிரஸ்: சவால் மிக்க பாதையில் ஒரு உத்வேகமூட்டும் பயணம்!

**திபங்கர்**



கம்யூனிஸ்ட் கட்சி பாரம்பரியத்தில், கட்சிக் காங்கிரஸ், குறிப்பிட்ட அந்த சூழலில் மேற்கொள்ளவிருக்கும் வழியை வகுத்தளிக்கும் மிக உயர்ந்த அமைப்பாகும். இந்தியாவில் தற்போதுள்ள சூழலானது, சுதந்திரத்துக்குப் பிந்தைய நாட்களில் கம்யூனிஸ்ட் இயக்கம் சந்தித்தவற்றிலேயே மிகவும் சவால் மிக்க சூழலாகும். இத்தகைய பின்புலத்தில், இகக(மாலெ)வின் 11வது காங்கிரஸ், கட்சியின் உள்ளார்ந்த வலுவையும் விரிவடைந்து வரும் அமைப்பையும் பாசிச மோடி ஆட்சிக்கு எதிராகவும் சங்கப் படைக்கு எதிராகவும் மக்கள் எதிர்ப்பை தீவிரப்படுத்துவதற்கான வளர்ந்து வரும் முன்முயற்சி, தலையீட்டை இயங்காற்றல் மிக்க வகையில் நிகழ்த்திக் காட்டியதெனலாம். காங்கிரஸ் துவங்குவதற்கு முன், பிப்ரவரி 15 அன்று நடந்த "ஜனநாயகம் காப்போம், இந்தியாவைக் காப்போம்" பேரணியிலிருந்து, பிப்ரவரி 20 இரவு முடிந்த நிறைவு நிகழ்ச்சி வரையிலான ஒரு வாரகால நிகழ்வுகளும் இன்றைய மிக முக்கியமான கட்டத்தில், இகக(மாலெ)யின் மாபெரும் புரட்சிகர மரபையும் அதன் மறு உறுதிசெய்யும் அதன் வலுவையும் ஆற்றலையும் வெளிப்படுத்தும் நிகழ்வுகளாக இருந்தன.

தொடர் நிகழ்ச்சிகளும் பல்வேறு தீர்மானங் களும் 11வது காங்கிரஸ், கட்சியின் நடந்து வரும் கொள்கை நடைமுறைகளையும் கட்சியின் வளர்ந்து வரும் அரசியல் வழியின் பல்வேறு பட்ட பரிமாணங்களையும் பிரதிநிதித்துவப் படுத்துவதாக இருந்தது. காங்கிரசுக்கு முந்தைய நாளன்று நடைபெற்ற பேரணி, கட்சியின் அமைப்பு வலுவையும் புதிய பகுதிகளில் கட்சி வளர்ந்து வருவதையும் நகர்ப்புர பிகாரின் நடுத்தர வர்க்கங்கள் உள்ளிட்ட புதிய பிரிவினர் மத்தியில் கட்சியின் வளர்ந்து வரும் செல்வாக்கையும் எடுத்துக் காட்டுவதாக இருந்தது. பிகாரின் பாஜக அல்லாத மெகா கூட்டணியில் உறுப்பினர் பாத்திரத்தை வகித்து அரசாங்கத்துக்கு வெளியி லிருந்து ஆதரவு தந்துவருகிறது; அதே வேளை, மக்களது பலதரப்பட்ட உரிமைகளுக்காக நடத்தும் போராட்ட உறுதிப்பாட்டை உயர்த்திக் காட்டுவதாகவும் இருந்தது. கட்சியின் வலிமை, வெகு மக்களுடனான நெருக்கமான பிணைப் பிலும், தொடரும் வேலையிலும் உள்ளது. மேலும், அனைத்துவிதமான கடினமான சூழ்நிலையிலும் தாக்குப்பிடித்து நிற்கும் மக்கள் போராட்டங்களிலும் உள்ளது. கட்சியின் இந்தக் கருவான வலிமையின் குவிப்பும் அறுதியிடலும் தான் பாசிச எதிர்ப்பில் கட்சியின் கடப்பாடு மிக்க பாத்திரத்துக்கும் இத்தகையதொரு (அரசியல்) வழி கோருகிற பலதரப்பட்ட கடமைகளுக்கும் முன் முயற்சிகளுக்கும் திறவுகோலாக விளங்குகிறது.

கட்சிக் காங்கிரசின் முறையான துவக்க மானது, இடது முகாமுக்குள் இருக்கும் நெருக்கமான ஒற்றுமை, ஒத்துழைப்புடன் துவங்கியது. இகக(மாலெ) ஒரு அகில இந்திய

ஒருங்கிணைப்பில் சேர்ந்துள்ள இகக(மா), இகக, புரட்சிகர சோசலிஸ்ட் கட்சி, பார்வர்ட் பிளாக் கட்சிகளுடன், ஜார்க்கண்டின் மார்க்சிஸ்ட் ஒருங்கிணைப்புக் கமிட்டி, மகாராஷ்டிராவின் லால் நிசான் கட்சி, மகாராஷ்டிராவின் சத்ய சோதக் கம்யூனிஸ்ட் கட்சி, பஞ்சாபின் ஆர்எம்பிஅய் கட்சி ஆகிய (நமது) நீண்டகால கூட்டாளிகளும் பங்கு பெற்று தங்களது ஒற்றுமை, ஒருமைப்பாட்டுச் செய்திகளை தெரிவித்தன.

தொலைதூர வெனிசுலா, ஆஸ்திரேலியா விலிருந்தும் அண்டை நாடுகளான பங்களாதேஷ், நேபாளிலிருந்தும் சர்வதேச ஒருமைப்பாட்டை வெளிப்படுத்தும் உத்வேகமூட்டும் வெளிப்பாட் டையும் பதினோராவது கட்சிக் காங்கிரஸ் கண்டது. இந்தியாவில் பயிற்றுவிக்கும் உக்ரேனிய பேராசிரியர், பாலஸ்தீனை ஆக்கிரமித் திருக்கும் இஸ்ரேலை புறக்கணிக்கும் பிடிஎஸ் இயக்கத்தைச் சேர்ந்த பிரதிநிதியின் கருத்து களையும் காங்கிரஸ் செவிமடுத்தது.

லத்தின் அமெரிக்கா, ஆப்ரிக்கா, அய்ரோப்பா ஆகிய நாடுகளின் முற்போக்கு கட்சிகள், பாகிஸ்தான், இலங்கை ஆகிய அண்டை நாடுகளிலிருந்தும் வீடியோ, எழுத்து பூர்வமான செய்திகளும் வந்திருந்தன. வெளிநாடு வாழ் இந்தியர்களும் ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பை எதிர்த்தும் நவ பாசிச சக்திகளை எதிர்த்தும் இந்துத்துவ வலதுசாரியின் திசைதவறிய சதித்திட்டங்களுக்கு சவால்விட்டும் வளர்ந்து வரும் தங்களது, சர்வதேச ஒருமைப்பாட்டு அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டு காங்கிரசை செழுமைப்படுத்தினர்.

அநேகமாக ஒரு கம்யூனிஸ்ட் கட்சி காங்கிரசில் எப்போதுமில்லாதவாறு முதல் முறையாக காங்கிரஸ் நிகழ்வுகளில், எழுத் தாளரும் களப்பணியாளருமான அருந்ததி ராய் போன்ற குடியுரிமைச் சமூகத்தைச் சேர்ந்த பலரும் பத்திரிகை, கல்வி உலகத்தைச் சேர்ந்தவர்கள் பலரும் கலந்துகொண்டு பேசினார்கள். நமது விருந்தினர் பலர், அரசியல் தீர்மானம், அமைப்பு பரிசீலனை அறிக்கை, காலநிலை மாறுதல் சவால் உள்ளிட்ட தீர்மானங்கள் விவாதித்து நிறைவேற்றப்பட்டது, மத்தியக் கமிட்டி தேர்ந்தெடுக்கப்பட்டது வரையும் காங்கிரசில் இருந்தனர். 27 மாநிலங்கள், ஒன்றிய ஆட்சிப் பகுதிகளில் இருந்து 1700 பிரதிநிதிகள், பார்வையாளர்கள் பங்கு பெற்றது, அனைத்து பேச்சாளர்களது பேச்சையும் பல மொழிகளிலும் மொழிபெயர்த்தது, நூற்றுக்கு மேற்பட்ட தோழர்களிடமிருந்து பெறப்பட்ட கருத்துகள், திருத்தங்கள் மீது நடந்த விவாதம், ஆறு தீர்மானங்கள், அறிக்கைகள் நிறைவேற்றப்பட்டது இறுதியாக, 81 பேரிலிருந்து 76 பேர் கொண்ட (மத்திய கட்டுப்பாட்டு ஆணையத்தின் தலைவர் பதவி பொறுப்பினடிப்படையிலான உறுப்பினர்) தேர்ந்தெடுக்கப்பட்டது, உட்கட்சி ஜனநாயகத்தில் மிகப்பெரும் நடவடிக்கையாக இருந்தது.

எதிர்க்கட்சித் தலைவர்களைக் கொண்டு கட்சிக் காங்கிரஸ் மேடையில் ஒரு அரசியல் கருத்தரங்கை நடத்தியதும் கூட மரபில்லாத ஒன்றாகும். பிகார் முதல்வரும் ஜேடியூ தலைவருமான நிதிஷ்குமார், துணை முதல்வரும் ஆர்ஜெடி தலைவருமான தேஜேஸ்வி யாதவ், காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர் சல்மான்குர்ஷித், தமிழ்நாட்டிலிருந்து விசிகவின் தலைவரும் மக்களவை உறுப்பினருமான தொல். திருமாவளவன் ஆகிய தலைவர்கள் 'ஜனநாயகம் காப்போம், இந்தியாவைக் காப்போம்' கருத்தரங்கில் கலந் து கொண்டதும் ஜார்க்கண்ட் முதல்வரும் ஜெஎம்எம் தலைவருமான ஹேமந்த் சோரன் அனுப்பியிருந்த வாழ்த்துச் செய்தியும் பாசிச மோடியின் பிடியிலிருந்தும் தரைமட்ட மாக்கும் சங்க் படையிடமிருந்தும் இந்தியாவைக் காக்க அனைவரையும் உள்ளடக்கிய தீர்மானகர மான எதிரணி ஒற்றுமையின் அவசரத் தேவையை அடிக்கோடிட்டுக் காட்டியது. இவர் களது கட்சிகள், அகில இந்திய அளவில் செயல் மிகு எதிரணி ஒற்றுமையை உருவாக்குவது தொடர்பாக மல்லுக்கட்டி வரும் நிலையில், எதிர்பார்த்தபடியே நிதிஷ் குமார், சல்மான் குர்ஷித் பேச்சுகள் நகைச்சுவை கலந்த பரிமாற்றமாகவே இருந்தன.

ஆனபோதும், பேச்சாளர்களின் வேடிக்கை பேச்சுகளுக்கிடையே, மோடி ஆட்சி இந்தியா முழுவதும் மூர்க்கத்தனமாக மறுபதிப்பு செய்ய எண்ணும் பேரழிவுமிக்க குஜராத் மாடலுக்கு மாறாக பிகார் மாடல் குறித்த பேச்சு அக்கறைமிக்க வகையில் முன்னுக்கு வந்தது. கடந்த 30 ஆண்டுகளாக பாஜக குஜராத்தில் மேலோங்கிய நிலையில் இருப்பதும் ஆனால், அது (பாஜக) பிகாரிலிருந்து வெளியேற்றப்பட்டு இருக்கிறது என்பதிலும் இந்த வேறுபாடு இல்லை.

குஜராத் மாடலில் நடுநாயகமாக இருப்பது,

2002 குஜராத் இனப்படுகொலையாகும். இனப்படுகொலையின் நடுநாயகமான தன்மை சமீபத்திய குஜராத் தேர்தல்களின் போது எண்ணற்ற முறை அடிக்கோடிட்டுக் காட்டப் பட்டது. பில்கிஸ் பானுவை வன்புணர்வு செய்து அவரது குடும்ப உறுப்பினர்களை படுகொலை செய்தவர்கள், 75வது சுதந்திர நாளன்று வீரர்களுக்குரிய வரவேற்புடன் முன்கூட்டியே விடுதலை செய்யப்பட்டபோது வெளிப்பட்டது. 2002 இனப் படுகொலை, 'கலவரக்காரர்களுக்கு' பொருத்தமான பாடம், இது குஜராத்தில் 'நிரந்தரமான அமைதியை' கொண்டுவந்துள்ளது என்று அமித்ஷா விவரித்த போதும் வெளிப் பட்டது.

பிகாரும் கூட கொடூரமான தொடர் படுகொலைகள் பலவற்றைக் கண்டிருக்கிறது. பூர்னியாவின் ருபாஸ்பூர் சந்த்வாவிலிருந்து ஆர் வாலின் லக்ஷ்மண்பூர் பாதே வரை, ஒடுக்கப்பட்ட மக்களின் படுகொலைகளால் பிகார் அவ்வப் போது ரணகளமாக்கப்பட்டது. சுதந்திரத்துக்குப் பிந்தைய இந்தியாவில், பாகல்பூர் கலவரம் மிகமிக அதிர்ச்சியூட்டும் மதவாதப் படுகொலை யாகும். ஆனால் பிகார், சாதிப் படுகொலைகளை அல்லது மத வன்முறைகளை ஒருபோதும் ஒரு அரசியல் மாடலாக ஏற்றுக் கொண்ட தில்லை. பிகாரில் இகக(மாலெ), அதன் துவக்கம் முதலே நிலப்பிரபுத்துவ வன்முறையையும் அரசு ஒடுக்குமுறையையும் வெற்றிகரமாக தாக்குப் பிடித்து நின்றிருக்கிறது. உண்மையில் இதைத் தான் பிகார் மாடல் என்று கூறமுடியும். பாபர் மசூதியினிடத்தில் மாபெரும் ராமர் கோவிலைக் கட்டும் திட்டத்துடன் அத்வானி மேற்கொண்ட மதவெறி பாசிச பயணத்துக்கு எழுந்த எதிர்ப்பும் பிகாரிலிருந்துதான் எழுந்தது என்பதை நினைவு கூருவதும் பொருத்தமானது. இனப்படுகொலை பயங்கரம் குஜராத் மாடலுக்கு நடுநாயகமாக இருந்ததென்றால் இதிலிருந்து வெகு கூர்மையான வேறுபாடாக, பிரபுத்துவமத வன்முறையை நிராகரித்து எதிர்த்து எழுந்தது பிகார் மாடலாகும்.

2002, குஜராத் இனப்படுகொலை பயங் கரத்தை முதலீடாக்கிக் கொண்டு சங்க்-பாஜக அமைப்பு தனது குஜராத் மாடலை எழுதுவதில் முன்னேறிக் கொண்டிருந்தது; இதில் மோடியும் அமித்ஷாவும் அரசியல் இசைக்குழுவின் தலைவர்களாக எழுந்துள்ளனர். அதானியும் அம்பானியும் கார்ப்பரேட் ராட்சசர்களாக வளர்ந்துள்ளனர். இந்த குஜராத் மாடலை, 2014 தில்லிக்கு கொண்டு வந்தது; இப்போது இந்த பாசிச மாடலால் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள பொருளாதார, அரசியல், சமூக அரசியல் பேரழிவால் இந்தியா முழுவதுமே இடர்ப்பட்டு வருகிறது. பேரழிவுமிக்க 9 ஆண்டுகளுக்குப் பிறகு, மோடி ஆட்சி முதலில் 'நல்ல நாளை' விற்பனை செய்தது, இப்போது 'அமுத காலத்தை' விற்று வருகிறது; இப்போது, அதானி சாம்ராஜ்யம் உலுக்கப்பட்டு வருவதாலும் எப்போதும் இல்லாத வகையில் மோடி-அதானி கூட்டணி அம்பலப்பட்டு, சவாலுக்கு இழுக்கப்பட்டிருப்பதாலும் இந்த மாடல் வெடித்துக் கொண்டிருக்கிறது. பாட்னாவில் பதினோராவது காங்கிரஸ் நடத்தப்பட்டதானது, வெடித்து வரும் குஜராத் மாடலுக்கு எதிராக பிகார் மாடலின் எதிர் தாக்குதல் தொடுக்கும் ஆற்றலைக் காட்டுகிறது.

மோடி ஆட்சி, எதிர்க் கட்சிகள் மீதும் ஒட்டு மொத்த நாடாளுமன்ற ஜனநாயக சட்டகத்தின் மீதும் அரசமைப்பு சட்ட ஆட்சியின் மீதும் தாக்குதலை தீவிரப்படுத்திவரும் நிலையில், 'அரசமைப்பு' ரீதியாக ஜனநாயகம் ரத்து செய்யப்பட்டதை இந்தியா எதிர்கொண்ட ஒரே தருணமான 1970களின் நடுவில் பிறப்பிக்கப்பட்ட அவசரநிலை காலத்தோடு இது அடிக்கடி ஒப்பி டப்படுகிறது. ஊழல், விலைவாசி உயர்வுக்கு எதிராக, சக்திமிக்க இரண்டு இளைஞர் இயக்கத்தை இந்தியா கண்டது. இந்த இளைஞர் இயக்கத்தின் இரண்டு மய்யங்களாக குஜராத்தும் பிகாரும் இருந்தன. குஜராத் கிளர்ச்சி நவ் நிர்மாண் இயக்கம் என்று அறியப்பட்டது. ஜெபியால் வழி காட்டப்பட்ட பிகார் இயக்கம் முழுப் புரட்சி இயக்கம் என்று அறியப்பட்டது. ஆர்எஸ்எஸ் மாணவர் பிரிவான எபிவிபி குஜராத் இயக்கத்தின் முக்கிய அமைப்பாக எழுந்தது. பிகாரில் அது, சோசலிஸ்ட் இயக்கத்துக்கு ஒத்து ஊதுகிற அமைப்பாக இருந்தது. இது, ஜனதா கட்சி உருவாக்கத்துக்கும் ஜனதா கட்சி அரசாங்கத்துக்கும் குஜராத்திலிருந்து இந்தியாவின் முதல் பிரதம மந்திரியாக மொராஜிதேசாய் வருவதிலும் போய் முடிந்தது. ஆர்எஸ்எஸ் பிரதான நீரோட்டத்துக்கு வருவதற்கும் சட்டரீதியான தன்மை பெறுவதற்கும் இதுவரை பெறமுடியாதிருந்த அகில இந்திய அளவில் அரசு அதிகாரத்தைப் பெறுவதற்கும் ஒரு பெரிய முன்னேற்றத்தைக் குறிப்பதாகவும் இருந்தது. ஆர்எஸ்எஸ், தனக்கு சாதகமாக சமநிலையை சாய்க்க முடிந்ததென்றால், பிகாரிலுள்ள இந்திய

கம்யூனிஸ்ட் கட்சி, முழுப் புரட்சி இயக்கத்தை எதிர்ப்பது காங்கிரசுடன் அணிசேர்வது எனும் அதன் தவறான முடிவால் கெடு வாய்ப்பாக கம்யூனிஸ்ட் இயக்கம் விளிம்பு நிலைக்குத் தள்ளப்பட்டது.

பிரிக்கப்படாத பிகார் சட்டப்பேரவையில் 1972ல் அதிக எண்ணிக்கையாக 35 இடங்களைப் பெற்றிருந்த இகக, தனது தளத்தை இழக்கத் தொடங்கியது. ஆர்எஸ்எஸ், ஜனதா கட்சியின் உள்ளிருந்தே அதை சீர்குலைக்கவும் கட்டுப்ப டுத்தவும் ஒரு பிரிவு சோஷலிஸ்டுகள் முன்னாள் ஜன சங்கத்தினர் ஆர்எஸ்எஸுடன் தங்கள் ஆதரவை தொடர்ந்ததாலும் ஜனதா கட்சி பரிசோதனை குறுகிய ஆயுளோடு முடிந்து போனது. பின்னர், ஆர்எஸ்எஸ், ஜனதா கட்சி பரிசோதனையை பாஜகவுக்கான ஏவுதளமாக பயன்படுத்திக் கொள்ள, பழைய சோசலிஸ்ட் இயக்கமோ தன்னை ஜனதா தளமாக மறு அணிச்சேர்க்கை செய்துகொண்டு, பிற்படுத்தப் பட்டோர் இட ஒதுக்கீடு பற்றிய மண்டல் ஆணைய பரிந்துரை அமுலாக்கத்தை அடுத்து, நீடித்த அரசியல் செல்வாக்கையும் சமூக அடித்தளத்தையும் (ஜனதா தளம்) பெற்றுக் கொண்டது.

சமீபத்திய பத்தாண்டுகளில் பிராந்திய கட்சிகளும் அடையாள அடிப்படையிலான கட்சிகளும் பல்கிப் பெருகியிருந்த போதும் வரலாற்று ரீதியாக சுதந்திர இந்தியாவுக்குப் பிந்தைய அரசியல் பரப்பு, காங்கிரஸ், சோசலிஸ்ட், கம்யூனிஸ்ட், இந்துத்வா வலது ஆகிய முக்கியமான நான்கு போக்குகளால் (இந்தியா) குறிக்கப்படுகிறது.

காங்கிரஸ் மேலோங்கிய நிலையிலிருந்த காலத்தின்போது இந்துத்வ வலது, தீவிர காங்கிரஸ் எதிர்ப்பு துருவமாக எழுந்து நிற்க, அப்போதிருந்த காங்கிரஸ் எதிர்ப்பு சூழலை தோதாக பயன்படுத்திக் கொண்டது. அதன் அரசியல் வளர்ச்சி ஒருபுறமிருப்பினும் மண்டலுக்குப்பிந்தைய காலத்தில் சோசலிஸ்ட் முகாமின் அமைப்பு ஒற்றுமை உடைந்து போனது. இந்த உடைவு, பிராந்திய அடிப்ப டையில் மட்டுமின்றி, பாஜக வின் எழுச்சி குறித்த சோசலிஸ்ட் முகாமின் பதில்வினை என்ற முக்கிய பிரச்சனையடிப்படையிலும் ஏற்பட்டது.

பாஜக தனது கருவான சில பிரச்சனைகளை தள்ளிப்போட ஒப்புக் கொண்டதன் மூலம் சோசலிஸ்ட்களின் சில பிரிவுகள் தேஜகூ பதாகை யில் இணைந்து கொள்வதை (பாஜக) வசதி யாக்கியது. முந்தைய தேஜகூ காலத்தைப்போல பாசாங்குத்தனத்தையோ செயல்தந்திர அடக்கத்தையோ இனியும் காட்டத் தேவை யில்லை என்பதை 2014 தெளிவாக்கி விட்டது. 2019ல் மோடி தொடர்ந்து இரண்டாவது முறையாக ஆட்சிக்கு வந்ததை அடுத்து, பாசிச ஆட்சி அனைத்து அதிகாரங்களையும் குவித்துக் கொண்டு இந்தியாவை எதிர்க்கட்சி இல்லாத குடியரசாக்கும் வேகத்தை துரிதப்படுத்திக் கொண்டிருக்கிறது. இந்தியாவை ஒரு கட்சி ஆட்சியாக்கவும் 50 ஆண்டுகளுக்கு இந்தியாவை ஆளுவதென்ற அவர்களது பேராவலையும் பாஜக தலைவர்கள் வெளிப்படையாகவே அறிவித்து வருகிறார்கள். இந்த புதிய கட்டம், கம்யூ னிஸ்ட்டுகள், சோசலிஸ்ட்கள், அம்பேத்க ரிஸ்ட்டுகள், காந்தியர்கள், நேருவியர்கள் நெருக்கமாக வருவதை, பாசிஸ்டுகளுக்கு எதிராக ஒருமுனைப்பட்ட எதிர்ப்பில் கரம் கோர்ப்பதை அவசியமானதாகவும் சாத்தியமானதாகவும் ஆக்கி இருக்கிறது. இதை ஏற்கத்தக்க வகையில், 11வது கட்சிக் காங்கிரஸ், இந்த கட்டாயமான தேவையையும் தூக்கிக் காட்டியிருக்கிறது. மேலும், பிகார் போன்றதொரு மாநிலத்தில், புரட்சிகர கருத்தியல், அமைப்பு, முன் முயற்சிகள், போராட்டங்களைக் கொண்ட மரபின் ஆதரவையும் கொண்டிருக்குமானால் அது ஏற்படுத்தக் கூடிய தாக்கத்தையும் உயரத்திக் காட்டியிருக்கிறது. இது, 1970களின் மத்தியில் இருந்த பிகாருக்கும் இன்றுள்ள பிகாருக்கும் இடையே உள்ள திட்டவட்டமான வேறுபாட் டையும் குறிக்கிறது. 50ஆண்டுகளுக்கு முன்பு லாலு பிரசாதும் நிதிஷ் குமாரும் அன்றிருந்த பாட்னாவின் மாணவர் இயக்கத்தை வழி நடத்திக் கொண்டிருந்தார்கள். இகக(மாலெ) பிகாரின் கிராமப்புர பகுதிகளில் அதிலும் குறிப்பாக பாட்னாவுக்கு அருகிலுள்ள சாகாபாத், மகத் பிராந்தியங்களில் போர்க்குணமிக்க புரட்சிகரப் போராட்டங்களை நடத்திக் கொண்டிருந்தது. ஆனாலும் இவ்விரு போக் குகளும் களத்தில் ஒன்று குவிந்து இருக்க வில்லை.

இந்த இரண்டு போக்குகளுமே அடிக்கடி சிறையில் சந்தித்து கொண்டன என்பதும் 'முழுப் புரட்சி' தேடுதலில் உத்வேகமடைந்த ஜெபி இயக்கத்தின் செயல்வீரர்கள் இகக(மாலெ) கட்சியில், அதிலும் குறிப்பாக குறுகிய காலமே வாழ்ந்த ஜனதா கட்சி அரசாங்க பரிசோதனை

சரிவடைந்ததை அடுத்து ஏற்பட்ட மாயை விலகிய செயல்வீரர்கள் சேர்ந்தனர் என்பதும் மற்றுமொரு செய்தி.

இகக(மாலெ), 1990கள் முதல், தேர்தல் அரங்கில் தனது இருப்பைக் காட்டத் தொடங்கி யிருந்தது. ஆட்சிக்(கடிவாளங்கள்) ஜெபி இயக்கத்தின் வாரிசுகளின் கைகளுக்குள் வந்தது; பாஜகவும் கூட நிதிஷ் குமாரது அய்க்கிய ஜனதா தளத்துடன் பலனளிக்கும் ஒரு கூட்டணியை ஏற்படுத்திக் கொண்டு பிகாரின் ஒரு ஆளும் கட்சியாகவும் மாறியிருந்தது. இகக(மாலெ), சட்டப்பேரவையில் பிகாரின் மிகவும் ஒடுக்கப்பட்ட, உரிமை மறுக்கப்பட்ட மக்களது புரட்சிகர எதிரணிப் பதாகையை உயர்த்திப் பிடித்து வருகிறது. இன்று, சமூக மாற்றம் மக்கள் உரிமைகளுக்கான சண்டையை முன்னெடுத்துச் செல்லும் அதேநேரம், மக்களது முன்னோக்கிய பயணத்துக்கு மிகப்பெரும் தடையாக முன்வந்துள்ள பாசிசத்தை தோற்கடிக்கும் புரட்சிகரக் கடமையை நிறைவேற்றுவதில் இகக(மாலெ) தீர்மானகரமாக இருக்கிறது. உள்ளூரில் செல்வாக்குமிக்க பிரபுத்துவ சக்திகளை எதிர்த்த, நிலம், கூலி, கவுரவத்துக் கான நேற்றைய போராட்டங்கள், பாசிச கொள்ளையர்களிடமிருந்து ஜனநாயகத்தைக் காக்கவும் இந்தியாவைக் காப்பதற்குமான இன்றைய போராட்டமாக வளர்ந்திருக்கிறது.

11வது கட்சிக் காங்கிரஸ், அடைய வேண்டிய நோக்கங்களையும் அவற்றை அடைய முன்னுள்ள வழிகளைக் குறித்தும் அடிக்கோ டிட்டுக் காட்டியுள்ளது. இப்போது, மக்கள் எதிர்ப்பின் முழு வலுவையும் இந்திய கம்யூனிச இயக்கத்தின் புகழார்ந்த மரபிலிருந்தும், இந்திய வரலாற்றின் ஒவ்வொரு முற்போக்கு மரபிலிருந்தும் முழு ஆற்றலையும் சுவீகரித்துக் கொண்டு ஒட்டுமொத்த கட்சியும் சூழ்நிலையின் தேவைக்கேற்ப எழுந்து நின்றாக வேண்டும். ❑

# தோள் சீலைப் போராட்டம், 200 ஆண்டுகள்: போராட்டம் தொடர்கிறது

## இளவழகன்

– சென்ற இதழ் தொடர்ச்சி

"தற்கால பிரச்சினை களை அப்படியே வைத்துக்கொண்டு கடந்தகால போராட்டங்களை நினைவு கூருவது காரியசாத்திய அணுகுமுறை கூடாது" என்று சென்ற இதழில் முடித்திருந்தோம்.

சில எடுத்துக்காட்டுகளுடன் முன் செல்வது நல்லது.

மார்ச் 12 அன்று பிரதமர் நரேந்திர மோடி, அய்யா வைகுண்டருக்கு 'புகழஞ்சலி' செலுத்தி ட்வீட் செய்து இருந்தார். வைகுண்டரின் பிறந்த நாளான மார்ச் 4 அல்லது 5 அன்று ஏன் அஞ்சலி செலுத்தி இருக்கக் கூடாது? என்ற கேள்விகள் அய்யா வழியைச் சேர்ந்தவர்களிடம் எழும்பி யுள்ளன. பொன்னார் போன்றவர்கள் பிரதமருக்கு நினைவூட்டியிருக்கக் கூடாதா? என்ற கேள்வி களும் எழுந்துள்ளன. அண்ணாமலை 4ம் தேதியே அஞ்சலி செலுத்தியிருக்கும் போது ஏன் அவர் பிரதமருக்கு நினைவூட்டியிருக்கக் கூடாது? என்று கேட்கும் குரல்களையும் கேட்க முடிந்தது.



"விஷ்வ குரு" வான நரேந்திர மோடிக்கு அய்யா வைகுண்டரின் பிறந்தநாளை தெரிந்துகொள்வது ஒன்றும் பெரிய பிரச்சினை யில்லை. ஆனால், நரேந்திர மோடியும் அவரது கூட்டத்தாரும் பின்பற்றும் "வாக்கு வங்கி அரசியல்" தான் காரணம். திமுகவின் கூட்டணிக் கட்சித்

தலைவர்களும் தமிழ்நாட்டின் முதலமைச்சரும் கேரள முதலமைச்சர் பினராயி விஜயன் உள்ளிட்டோர் மார்ச் 6ம் தேதி நாகர்கோவிலில் பிரம்மாண்டமான நிகழ்ச்சி ஒன்றை நடத்தி முடித்ததன் பின்னணியில்தான் பிரதமருக்கு நினைவூட்டப்பட்டிருக்கிறது என்பதை புரிந்துகொள்ள பெரிய ஆராய்ச்சி எதுவும் தேவையில்லை. பிரதமரின் ட்வீட்டைப் பார்த்தால் இதை இன்னும் எளிதாக புரிந்து கொள்ளலாம். "அனைவரையும் உள்ளடக்கிய அனைவருக்கும் நீதி கிடைக்கும் சமூகத்தை" (தினமலர் மொழிபெயர்ப்பு), உருவாக்க பாடுபட்ட அய்யா வைகுண்டருக்கு பிரதமர் அஞ்சலி செலுத்துகிறார்.

ஒடுக்கப்பட்ட சமுதாயத்தில் உதித்த வைகுண்டர், இந்து தர்மத்தில் பெண்கள் மார்பை துணி கொண்டு மறைக்க உரிமை இல்லை; ஆண்கள் மீசை, தாடி வைக்க உரிமை இல்லை என்பதைக் கண்டு கொதித்து எழுந்தவர். மேலாடை அணியுங்கள், மீசை, தாடி வையுங்கள் என்று துணிச்சலூட்டியவர். அதனால்தான் அவர் வைகுண்டர் ஆனார். அப்படிதான் அவர் வைகுண்டர். ஆனால் பிரதமரின் 'புகழஞ்சலி' யில் புகழும் இல்லை, அஞ்சலி யும் இல்லை. அய்யா வழி மக்களை ஏமாற்றும் முயற்சி மட்டுமே இருக்கிறது. அனைவருக்கும் நீதி பற்றி பிரதமர் ட்வீட் செய்திருக்கிறார். ஆனால் அய்யாவழி மக்களுக்கு நீதி வழங்க குமரி மாவட்டத்தின் பாஜக வினர் மறுக்கிறார்கள்!? அய்யா வழியினர், ஒலி பெருக்கி வைத்து அய்யா புகழ் பரப்புவதை காவல்துறையை வைத்து தடுத்தனர். ஆனால் அண்ணா மலையும் நரேந்திர மோடியும் வைகுண்டருக்கு புகழஞ்சலி செலுத்துவதாக நாடகமாடுகிறார்கள். மார்க்சிஸ்ட் லெனினிஸ்ட் கட்சி மட்டும் அய்யா வழியினரது வழிபாட்டுச் சுதந்திரத்துக்காக குரல் கொடுத்தது. இந்துக்களின் ஒரு பிரிவினர் தான் அய்யா வழியினர் என்று கூறும் பாஜகவினர், அவர்கள் கூறும் பெரும்பான்மை இந்துகளுக்குள்ள வழிபாட்டு உரிமையை ஏன் அய்யாவழி யிருக்கும் மறுக்க வேண்டும்? ஒரு பக்கம் அய்யா வழியினர் மத்தியில் "நீங்களும் இந்துக்கள்தான் என்று கூறி அய்யா வழியினர் மத்தியில் ஊடுருவ முயலும் ஆர்எஸ்எஸ் பாஜகவினர், மற்றொரு பக்கம் இவர்களுக்கு எதிராக (அசல்) இந்துக்களை உசுப்பி விட்டு ஓட்டு ஆதாயம் அடைய விரும்புகின்றனர். இந்த வாக்கு வங்கி அரசியல்தான், பிரதமர் தாமதமாக 'புகழஞ்சலி' செலுத்தியதற்கு காரணம். ஆனால், தமிழ்நாட்டின் பாஜக வினரோ, பிரதமரோ தோள் சீலைப் போராட்டம் பற்றி எதுவும் பேசவில்லை. அன்றைய இந்து சனாதனவாதிகள், மார்பை துணி கொண்டு மறைக்கக் கூடாது என்றார்கள். 21ம் நூற்றாண்டு சனாதனவாதிகள் முகத்தை துணி கொண்டு மறைக்கக் கூடாது என்று வெறி யாட்டம் நடத்தினார்கள். எனவே அவர்களிட மிருந்து தோள் சீலை அறப் போராட்டத்தின் சமத்துவத்தை, சமூக நீதியை, சுயமரியாதையை நினைவுகூரும் முற்போக்குத் தன்மையை சற்றும் எதிர்பார்க்க முடியாது, எதிர்பார்க்கக் கூடாது.

தோள் சீலைப் போராட்டம் சமூக நீதிக்கான போராட்டம் என்று முதலமைச்சர் ஸ்டாலின் மிகச் சரியாகவே அழுத்தந்திருத்தமாக குறிப்பிட்டார். அதை வழி மொழியும் விதமாக மேடையிலிருந்த கேரள முதலமைச்சர் பினராயி விஜயனும் பேசினார். இந்துத்வகார்ப்பரேட் மோடி ஆட்சிக்கெதிராக சமூக நீதி, சமத்துவ, சுயமரியாதை போராட்ட மரபுகளை நினைவு கூர்ந்து புதிய தலைமுறையினரை அணி திரட்டவேண்டியது மிகவும் அவசியமானது. வைக்கம் போராட்டத்தின் நூறாவது ஆண்டைக் கொண்டாட கேரளம் வருமாறு கேரள முதலமைச்சர் பினராயி விஜயன் தமிழ்நாடு முதலமைச்சருக்கு அழைப்பு விடுத்தார். அவரும் அழைப்பை ஏற்று ஏப்ரல் 1 அன்று கேரளம் சென்றிருக்கிறார். நல்லது.

200வது ஆண்டைக் கண்டிருக்கும் தோள் சீலைப் போராட்டமும் 100 வது ஆண்டைக் கண்டிருக்கும் வைக்கம் கோவில் நுழைவுப் போராட்டமும் தமிழ்நாடு, கேரளாவை தழுவியவை. ஆனால், இவற்றில் உள்ள அனுபவங்கள், வெற்றிகள் இந்த இரண்டு மாநிலங்களுக்கு மட்டும் உரியவையல்ல. இவ்விரு மாநிலங்களுக்குள் மட்டும் நிறுத்திக் கொள்ளப்பட வேண்டியவை அல்ல. அகில இந்திய அளவில் எடுத்துச் செல்லப் பட வேண்டியவை.

ஆனால் அவை காரியசாத்திய அடிப்ப டையில் செய்யப்படக் கூடாது.

மார்ச் 6 தோள் சீலைப் போராட்டத்தின் 200வது ஆண்டு கொண்டாட்டத்திற்கு சென்ற முதலமைச்சர் ஸ்டாலின், அன்று காலையில் கீழடி அருங்காட்சியகத்தை திறந்து வைத்து விட்டு, மிகப்பெரும் பெருமையுடன் தற்படமும்

எடுத்துக் கொண்டு நாகர்கோவில் சென்றிருந்தார்.

கீழடி நகர நாகரிகத்துக்குச் சொந்தக்காரர்கள் தமிழர்கள், சிந்து சமவெளி நாகரிகத்துக்கு சற்றும் குறையாதவர்கள், சங்ககாலத் தமிழர்களின் வாரிசு கள் என்று கடந்தகால புகழ்மாலைகளைச் சூட்டிக் கொள்வதே போதுமானதா?

அனைத்து சாதியினரும் அர்ச்சகராகலாம் என்ற சட்டம் திமுக ஆட்சி காலத்தில் கொண்டு வரப்பட்டது. இந்தியாவிற்கே முன்னோடியான சட்டமது. இதற்குப் பின்னால் பெரியாரின், தமிழக முற்போக்கு மக்களின் நீண்ட நெடிய போராட்டம் இருக்கிறது. ஆனால் தமிழ் நாட்டிற்கு முன்பே செயல்படுத்திய மாநிலம் என்ற பெருமையை கேரளம் தட்டிச் சென்று விட்டது. ஏன் தமிழ்நாடு 2021 வரை காத்திருக்க வேண்டி வந்தது? அனைத்து சாதியினரையும் அர்ச்சகராக்கிய கேரளம், அய்யப்பன் கோவிலுக்கு பெண்கள் சென்று வழிபடலாம் என்ற உச்ச நீதிமன்ற தீர்ப்பை ஆதரித்து செயல்படுத்தப் போவதாக கூறிய கேரள இடது முன்னணி அரசாங்கமும் மார்க்சிஸ்ட் கட்சியும் பிறகு பின்வாங்கி விட்டதைக் கண்டு நாடு முழுவதுமுள்ள முற்போக்கு அமைப்புகளும் பெண்ணுரிமை அமைப்புகளும் கடும் ஏமாற்றமடைந்து போயின. தமிழ்நாட்டில், பெண்களுக்கு சொத்துரிமை உண்டு என்று திமுக ஆட்சியின் போது சட்டம் கொண்டு வரப்பட்டது. இதுவரை, எந்த அளவு பெண்கள் சொத்துரிமை பெற்றுள்ளனர்? என்ற புள்ளி விவரத்தை இந்த அரசால், திட்டக் குழுவால் வெளியிடமுடியுமா? வெளியிடுவது மிகவும் அவசியம்.

வைக்கம் விழாவிற்கு புறப்படும் முன் ஓராண்டு முழுவதும் வைக்கம் வெற்றி விழா கொண்டாடப்படும் என்று முதலமைச்சர் சட்டப் பேரவையில் அறிவித்திருக்கிறார். எதிர்பார்த்தது தான். ஆனால் இந்த கொண்டாட்டத்தில் சொல்லப்பட உள்ள செய்திகள் என்ன?

தமிழ்நாட்டில், தலித்துகள் கோவில்களில் சமத்துவமாக வழிபடும் உரிமை மறுக்கப் படுகிறது. உஞ்சனை தொடங்கி மாவட்டம் தோறும் தலித்துகளின் வழிபாட்டு உரிமை மறுக்கப்பட்டு வருகிறது. மிக அண்மையில், சேலம் மாவட்டத்தில், திமுக பிரமுகர் ஒருவர் கோவிலுக்குள் சென்று கும்பிட்ட தலித் இளைஞர் ஒருவரை அநாகரிகமாக நடத்தியதை யாரும் மறந்திருக்க முடியாது. புவனகிரி அருகில் திருவிழா நடத்தி சாமி ஊர்வலம் நடத்திய தலித் இளைஞர்கள் காட்டுமிராண்டித்தனமாக தாக்கப் பட்டுள்ளனர். அந்தந்த பகுதியில் உள்ள ஆதிக்க சாதியினர், தலித்துகளின் வழிபாட்டு உரிமையை தடுக்கின்றனர். அதிகாரிகள் சட்டம் ஒழுங்கு என்ற பேரில் கோவில்களை பூட்டிவிடுகின்றனர் நம்பூதிரி பார்ப்பனர்களின் சனாதன ஆதிக்கத்தை உடைத்தெறிந்தார் பெரியார். ஆனால், தமிழ்நாட்டில் இடைத்தட்டு சாதியினர் ஆதிக் கத்தை ஏன் இன்னும் உடைக்க முடியவில்லை? உஞ்சனையில் இந்த ஆதிக்கத்தை உடைக்க முயன்ற ஐவர் படுகொலை செய்யப்பட்டனர். தேவகோட்டை அருகிலுள்ள சிறுவாச்சூர் கோவிலில் தலித்துகளை வெற்றிகரமாக வழிபட வைத்தார் என்பதற்காக மார்க்சிஸ்ட்-லெனினிஸ்ட் தலைவர் மாடக்கோட்டை தோழர் சுப்பு படுகொலை செய்யப்பட்டார்.

சுடுகாட்டுக்கு தலித்துகள் பிணத்தைக் கொண்டு செல்ல முடியாத அவலநிலை தமிழ்நாடு முழுவதும் தொடர்கிறது. கல்விச் சிறந்த தமிழ்நாட்டில் பள்ளிகளில் சாதி கோலோச்சுகிறது!?

பேருந்துகளில் பெண்கள் கட்டணமின்றி செல்ல முடிகிறது. ரூ.1000 உரிமைத் தொகை கூட பெற முடிகிறது. ஆனால், பெண்கள் அச்சமின்றி கல்விக் கூடங்களுக்கு சென்று திரும்ப முடிகிறதா? அன்று பொள்ளாச்சி. இன்று கலாஷேத்ரா வரை எண்ணற்ற கொடூர சம்பவங்கள். அதிமுக ஆட்சியின் பொள்ளாச்சி குற்றவாளிகள் திமுக ஆட்சியில் இன்னும் ஏன் தண்டிக்கப்படவில்லை? கனியாமூர் பள்ளி நிர்வாகத்தின் பக்கம் நீதிமன்றம், காவல்துறை நிற்கிறது. சிறீமதி பக்கம் யார் நிற்பது? "குற்றவாளிகள் தண்டிக்கப்படுவார்கள்" என்று முதலமைச்சர் சிறீமதி பெற்றோருக்கு கொடுத்த வாக்குறுதியை யார் காப்பாற்றுவது?

பெரியார் வைக்கம் வீரர் என்ற ஒற்றைப் பரிமாணம் கொண்ட தலைவரல்ல. பார்ப்பனிய சனாதன எதிர்ப்புத் தலைவர். பெண் விடுதலையை மிகமிக முன்னோக்கி சிந்தித்தவர். சாதி ஒழிப்பு தத்துவத்தை வழங்கிய அண்ணல் அம்பேத்கரோடு கொள்கைபூர்வமான நட்பு கொண்டவர்.

எனவே, தோள் சீலைப் போராட்டத்தை நினைவு கூரும் போது, வைக்கம் கோவில் நுழைவு போராட்டத்தை நினைவு கூரும் போது,

இன்றைய ஏற்றத் தாழ்வுகள் களையப்படுவதற்கு, தலித்துகள், பெண்கள் மீதான இழிவுகள் அழித்து ஒழிக்கப்படுவதற்கு பயன்பட வேண்டும்.

மாறாக, மலம் கலந்த வேங்கை வயல் தண்ணீர் தொட்டியை மூடுவதற்கு பயன்பட்டு விடக்கூடாது.

வைக்கம் செல்லும் முதல்வரை, அண்ணா வாக செல்லுங்கள், கலைஞராக பேசுங்கள், பெரியாரக திரும்பி வாருங்கள் என்று அமைச்சர் அன்பில் பொய்யாமொழி வாழ்த்தி வழியனுப்பி வைத்தார். ஏன் முதலாவதாக சொல்ல வேண்டிய பெரியாரை மூன்றாவதாகச் சொல்லியிருக்கிறார்? அவரே விளக்கட்டும்.

வைக்கம் சென்று திரும்பும் முதல்வர் சமூகநீதி மேடையை அகில இந்திய அளவில் விரிவுபடுத்த ஒரு இணையவழி கூட்டத்தை நடத்துகிறார். நல்லது. ஆனால், சமூகநீதி குறித்து நமக்கு சில கோரிக்கைகள் உள்ளன.

பெண்கள் சொத்துரிமை பெற்றது குறித்து ஒரு ஆய்வறிக்கை வெளியிட வேண்டும். பொள்ளாச்சி தொடங்கி கலாஷேத்ரா வரை பாலியல் வன்கொடுமை குற்றவாளிகள் குறுகிய காலத்துக்குள் தண்டிக்கப்பட வேண்டும்.

சிறீமதி மர்ம மரணத்துக்கு நீதி வேண்டும். முதலமைச்சர் வாக்குறுதி காப்பாற்றப்பட வேண்டும்.

சாதி ஒழிப்புக்கு முதல்படியாக, பள்ளிகளில் சாதி ஒழிக்கப்பட்டு சகோதரத்துவமும் நட்பும் செழிக்கும் சித்திரச் சோலைகளாக்கிட வேண்டும்.

தமிழ்நாடு முழுவதும் சமத்துவபுரம் இருக்கும்போது சமத்துவ சுடுகாடு, சமத்துவ மேல்நிலை தண்ணீர் தொட்டி இருக்க முடியாதா? முடியும். கொண்டுவர வேண்டும்.

வேங்கை வயல் என்ற பெயரையே உச்சரிக்காவிட்டாலும் வேங்கை வயல் குற்றவாளிகளை இனியும் தாமதிக்காமல் சட்டத்தின் முன் நிறுத்தி தண்டிக்க வேண்டும்.

தோள் சீலைப் போராட்டம், வைக்கம் போராட்டம் சமூக நீதிப் போராட்டம், சமத்துவத்துக்கான போராட்டம் என்றால், சமூக நீதிப் போராட்டம், சமத்துவத்துக்கான போராட்டம் தொடர்கிறது என்பது உண்மைதானே?

# நீதிக்கான போராட்டத்தில், ஜனநாயகத்துக்கான போராட்டத்தில் ஒன்று சேருவோம். அதுதான் தோழர் சந்திரபோசுக்கு செலுத்தும் பொருத்தமான அஞ்சலி

(மார்ச் 19 அன்று தேவகோட்டையில் நடைபெற்ற தோழர் சந்திரபோஸ் நினைவஞ்சலிக் கூட்டத்தில் இகக(மாலெ) மத்தியக் கமிட்டி உறுப்பினர் தோழர் பாலசுந்தரம் பேசியதின் சுருக்கம்)

**அனைவருக்கும் வணக்கம்!**

தோழர் சந்திரபோஸ் நினைவஞ்சலி கூட்டத்தை ஏற்பாடு செய்துள்ள கட்சி சிவகங்கை மாவட்டத் தலைமைக் குழுவுக்கு பாராட்டுகள்.

தோழர் செந்தமிழ், இது கந்தக பூமி என்று சொன்னார். இந்த பூமியை எந்தப் பக்கம் உரசினாலும் தீப்பிடித்துக்கொள்ளும் என்று சொன்னாரா? எப்படி வேண்டுமானாலும் தீப்பிடித்துக்கொள்ளும் என்று சொன்னாரா? எப்போது வேண்டுமானாலும் தீப்பிடித்துக் கொள்ளும் என்று சொன்னாரா? தெரியவில்லை. அவர்தான் சொல்ல வேண்டும்.

ஆனால் இந்த மண்ணின் வரலாறு பற்றி எரிந்த வரலாறு. போராட்ட வரலாறு. வெள்ளையரை எதிர்த்துப் போராடிய வீர வரலாறு. நமக்குத் தெரியும். மருது சகோதரர்கள், ராணி மங்கம்மாள், குயிலி என்று பலரைக் கூறலாம். 1942, ஆகஸ்ட் புரட்சியில் எழுச்சி பெற்ற தேவகோட்டை புரட்சி! தலித்துகளின் சமத்துவம், சுயமரியாதைக்காக கர்ஜித்த தியாகி இமானுவேல் சேகரன். உழைக்கும் மக்கள் அதிகாரத்துக்காக செங்கொடி தூக்கி போராடிய தோழர் மாடக்கோட்டை சுப்பு, தோழர் நமசு என பலரை நினைவு கூறலாம்...... .

இந்த வரிசையில் தோழர் சந்திரபோசையும் குறிப்பிடலாம். தோழர்கள் பலரும் பேராசிரியர் களும் தோழர் சந்திரபோசுடன் தங்களுக்குள்ள




தோழர் சிம்சன் பேசியபோது

நினைவுகளை நம்முடன் பகிர்ந்து கொண்டனர். எனக்கும் கூட சில முறை அவருடன் ஊடாடிய அனுபவமுண்டு.

நானும் எமது கட்சியும் அவரது பொது வாழ்வை வேறு ஒரு தளத்தில் பார்க்கிறோம். தியாகி இமானுவேல் சேகரன் நினைவுநாளை ஒரு அரசியல் நிகழ்வாக மாற்றிக் காட்டினார். 1989 தொடங்கி ஆண்டு தோறும் இமானுவேல் சேகரனது நினைவுநாளை ஒரு அரசியல் அணிதிரட்டலாக மாற்றிக் காட்டியதில் அவரது பங்கு முதன்மையானது.

தியாகி இமானுவேல், தனது இளமைக் காலத்திலேயே இந்திய விடுதலைப் போராட்டத்தில் கலந்து கொண்டார். அதனால் பள்ளிப் படிப்பு மறுக்கப்பட்டு தண்டிக்கப் பட்டார். கல்வி வாய்ப்பை பறிகொடுத்த அவர், ராணுவத்தில் சேர்ந்தார். ராணுவத்திலிருந்து திரும்பிய அவர், ஒடுக்கப்பட்ட தலித்துகள் மீது ஏவப்பட்ட அடக்குமுறை கண்டு பொங்கி எழுந்தார். அவர்களது சுயமரியாதைக்காக, கவுரவத்துக்காக பாடுபடுவதென்று முடிவுசெய்து களத்தில் இறங்கினார். அதை தனது போராட்ட வாழ்க்கையாகவே மாற்றிக்கொண்டார். அந்த போராட்டத்தில் அவர் எதிரிகளால் கொல்லப் பட்டார். தியாகியானார் இமானுவேல் சேகரன்.

அந்த இமானுவேல் சேகரனது நினைவு நாளைத்தான் ஒரு அரசியல் நிகழ்ச்சியாக, மாநிலம் முழுவதுமிருந்து தலித்துகள் அணி திரளுகிற ஒரு அரசியல் நிகழ்வாக தோழர் சந்திரபோஸ் மாற்றிக் காட்டினார். இந்த மாவட்டத்தில் நடைபெற்று வருகிற "ஜெயந்தி" நிகழ்வுக்கு இணையாக இமானுவேல் சேகரனது நினைவுநாளை மாற்றிக் காட்டினார். அக்டோ பரில் ஆண்டுதோறும் நடக்கிற அந்த நிகழ்வுக்கு அரசியல் தலைவர்களுள் யார் முதலில் செல்வது என்பதில் கடும் போட்டியிருக்கும். அதற்கு இணையாக, அரசியல் கட்சிகள், தலைவர்கள் இமானுவேல் சேகரனது நினைவு நாளுக்கு செல்வது என்ற முக்கிய அரசியல் நிகழ்வாக மாறியது. மனுநீதி வருணாசிரம சருமத்தை அரசியல் கொள்கையாக ஏற்றுக் கொண்ட பாஜக கூட தியாகி இமானுவேல் சேகரனது நினைவு நாளில் அவரது நினைவிடத்துக்கு செல்லுகிற நிலையும் உருவானது. அதனால் இமானுவேல் சேகரனை, அவரது கொள்கைகளை பாஜக ஏற்றுக் கொண்டு விட்டது என்று யாரும் நம்ப மாட்டார்கள். தலித்துகளது வாக்குகளை வாங்கி விடலாம் என்ற முயற்சிதான் என்பது அனைவ ருக்கும் தெரியும்.

பரமக்குடி துப்பாக்கிச் சூட்டை எவரும் மறந்திருக்க முடியாது. ஏழுபேர் சுட்டுக் கொல்லப் பட்டார்கள். இந்த துப்பாக்கிச் சூடுபற்றி சட்டப் பேரவையில் விளக்கமளித்தார் அப்போதைய முதலமைச்சர் ஜெயலலிதா. கலவரக்காரர்கள் மீது 'அந்த துப்பாக்கிச் சூடு நடந்திருக்காவிட்டால் ஏராளமான பொருள் சேதங்கள் ஏற்பட்டிருக்கும். பொதுமக்களுக்கு எந்த பாதுகாப்பும் இருந்தி ருக்காது' என்று பேசினார். செப்டம்பர் 11, இமானுவேல் சேகரனது நினைவு நாளில் அணிதிரண்டவர்கள், ஜெயலலிதாவுக்கு 'கலவரக் காரர்களாகி' விட்டார்கள். வன்முறையாளர்களாகி விட்டார்கள்.

ஆக, இமானுவேல் சேகரன் நினைவு நாளில் ஆண்டுதோறும் திரளும் தலித்துகளின் அணி திரட்டலை சிதறடிக்க வேண்டும்; தடுத்து நிறுத்த வேண்டும் என்ற திட்டம்தான் பரமக்குடி துப்பாக்கிச் சூடு க்குப் பின்னால் இருந்த 'அரசியல் காரணம்'. இமானுவேல் சேகரன் கொல்லப்பட்டதற்குப் பின்னால் இருந்த அரசியல் சதித்திட்டம்தான் பரமக்குடி துப்பாக்கிச் சூட்டுக்குப் பின்னாலும் இருந்தது. இதை அறிந்துகொள்ள பெரிய அரசியல் ஆராய்ச்சி எதுவும் தேவையில்லை.

பரமக்குடி துப்பாக்கிச் சூடு, தலித்துகள் படுகொலை மாநிலம் முழுவதும் தலித்துகள் மத்தியில் கடும் கொந்தளிப்பை ஏற்படுத்தியது. அதன் ஒருபகுதியாகத்தான் அதிமுக ஆட்சியின் ஒடுக்கு முறையைக் கண்டித்து, தோழர் சிம்சன் சுட்டிக்காட்டியது போல, 10,000க்கும் மேற்பட்ட பெண்களை பரமக்குடியில் திரட்டி ஜெ ஆட்சிக்கு எதிராக கடும் எதிர்ப்பைக் காட்டினார் தோழர் சந்திரபோஸ். இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்-லெனினிஸ்ட்) இந்த எதிர்ப்பு

இயக்கத்தில் தீவிரமாக பங்கு பெற்றது.

எங்கெல்லாம் அநீதியும் அடக்குமுறையும் இருக்கிறதோ அவற்றை எதிர்த்து அங்கெல்லாம் இமானுவேல் சேகரன், சுப்பு, சந்திரபோஸ் இருப்பார்கள். இருக்க வேண்டும்.

தோழர் சந்திரபோசும் என்னைப் போன்ற வர்களும் 80,90 களில் இணைந்து பயணித்தோம். அதை நினைவுகூரும் வகையில் மட்டும் இந்த நினைவஞ்சலி நிகழ்ச்சியை நடத்தவில்லை. மேலே குறிப்பிட்டது போல தலித்துகளுக்கு எதிரான அநீதியை, அடக்கு முறையை முடிவுக்கு கொண்டு வரும் உறுதியுடன் களமாடினார். அவரது இந்த போராட்ட பதாகையை முன்னெடுத்துச் செல்ல வேண்டும். அந்த முயற்சியின் ஒரு நிகழ்வாக இந்த நினைவஞ்சலி நிகழ்ச்சியை நடத்தி கொண்டிருக்கும் கட்சியின் மாவட்டக் கட்சியை பாராட்டுகிறேன். இதே சிவகங்கை மாவட்டத்தில்தான் கீழடி இருக்கிறது. அங்கு 2600 ஆண்டுகளுக்கு முன்பே மேம்பட்ட நகர நாகரிகம், பண்பாடு இருந்ததாக பெருமை கொள்கிறோம். பக்கத்திலுள்ள புதுக்கோட்டை, வேங்கைவயலில் தான் தலித்துகள் குடிக்கும் நீரில் மலம் கலந்த கொடூரம் நடந்திருக்கிறது. இது என்ன வகையான நாகரிகம்? எந்த வகைப்பாட்டில் பண்பாடு? குற்றவாளிகள் இன்னும் கூட கைது செய்யப் படவில்லை! எனவே தியாகி இமானுவேல், சுப்பு, சந்திரபோஸ் இவர்களது போராட்டத்தை முன்னெடுத்துச் செல்ல வேண்டும்.

எல்லாவற்றையும் விட நாட்டை இன்று மாபெரும் ஆபத்து கவ்வியிருக்கிறது. ஆர்எஸ்எஸ் பாஜக ஆபத்து. நேற்று மோடி ஒரு பத்திரிகை மாநாட்டில் பேசியிருக்கிறார். இந்தியாவில் 'ஜனநாயகமும்' அமைப்பு முறைகளும் வெற்றி பெற்றிருப்பதாக பேசியிருக்கிறார். மோடி, பாசிசத்தை 'ஜனநாயகம்' என்று கூறியிருக்கிறார். ஒருவேளை அதனால் தானோ என்னவோ பேராசிரியர் ராகுலதாசன் ஜனநாயகத்தின் மீது "நம்பிக்கை இல்லை" என்று சொல்லியிருப்பார் என்று நினைக்கிறேன். இன்று ஜனநாயகம் காப்பாற்றப் பட வேண்டும். அதனால்தான் இகக(மாலெ) அதன் 11வது அகில இந்திய மாநாடு, "ஜனநாயகம் காப்போம்; இந்தியாவைக் காப்போம்" முழக்கத்தை செயலாக்க தன்னை முழுவதுமாக அர்ப்பணித்துக் கொண்டது. ஜனநாயகம் காப்பது என்றால் ஏதோ எதிரில் உட்கார்ந்து பேசுவது என்பதாக எடுத்துக் கொள்ளக் கூடாது. நாடாளுமன்ற ஜனநாயகத்தை மோடி ஆட்சி சிதைத்துக் கொண்டிருக்கிறது. அம்பேத்கர் பல அறிஞர்களுடன் சேர்ந்து உருவாக்கிய அரசமைப்புச் சட்டத்தை சீரழித்து சின்னாபின்னமாக்க வேலை செய்து கொண்டி ருக்கிறது. எனவே அரசமைப்புச் சட்டத்தை, ஜனநாயகத்தை காக்க வேண்டியது அவசர அவசியமாக இருக்கிறது. ஜனநாயகம் இல்லாவிட்டால் கோரிக்கைகள் எழுப்ப முடியாது. போராட்டமே நடத்த முடியாது. பெண்கள், தலித்துகள், ஒடுக்கப்பட்ட விளிம்பு நிலை மக்கள் பெரும்பான்மை உழைக்கும் மக்கள் உரிமைகள், நலன்கள்தான் ஜனநாயகம். மோடிஅதானியின் அடக்குமுறையும் கொள்ளை யும் ஜனநாயகமல்ல. நாம் நமது ஜனநாயகத்திற் காகப் போராடியாக வேண்டும். அநீதி, அடக்குமுறையை எதிர்த்து முன்னேற ஜனநாயகம் வேண்டும். பல வண்ணங்கள், அமைப்புகள், தலைவர்கள் இங்கே கூடியிருக்கிறோம். ஆனால், அனைத்தும் ஒரு வண்ணத்திற்கு எதிராக, மோடி அதானி பாசிச சர்வாதிகாரத்துக்கு எதிராக கரம் கோர்க்க வேண்டும். அதுதான் பாட்னா மாநாட்டின் செய்தி. அந்த அடிப்படை யில்தான் விசிக தலைவர் தோழர் தொல். திருமாவள வனும் அந்த மாநாட்டு நிகழ்வில் கலந்து கொண்டார்.

நீதிக்கான போராட்டத்தில், ஜனநாயகத்துக் கான போராட்டத்தில் ஒன்று சேருவோம். அதுதான் தோழர் சந்திரபோசுக்கு செலுத்தும் பொருத்தமான அஞ்சலியாக இருக்கும். ❑



# பாசிச, இன வெறுப்பு அரசியலை முறியடித்து உழைக்கும் மக்கள் ஒற்றுமையைப் பலப்படுத்துவோம்!

## கே.ஜி.தேசிகன்

*மனித வாழ்க்கையில் புலம் பெயர்வு என்பது காலம் காலமாக நடந்து வருகிறது. மாவட்டம் விட்டு மாவட்டம் துவங்கி, மாநிலம் விட்டு மாநிலம், தேசம் விட்டு தேசம், கண்டம் விட்டு கண்டம் என அது விரிவடைந்து செல்லும் இயக்கப் போக்காக நிலை பெற்றிருக்கிறது. தேச எல்லைகளைக் கடக்கும் போது அது கட்டுப்பாடுகளுக்கும் சட்டதிட்டங்களுக்கும் உட்பட்டதாகி விடுகிறது. இந்தியாவை பொறுத்தவரை நாட்டிற்குள் எந்த மாநிலத்திற்கு வேண்டுமானாலும் செல்ல, பணிபுரிய, தொழில் செய்ய அரசமைப்புச் சட்டம் அனுமதி அளிக்கிறது. சில வடகிழக்கு மாநிலங்கள் வேலைக்கு வருபவர்களை ஒழுங்குபடுத்த உள் நுழைவுச் சீட்டு முறையை கொண்டுள்ளன.*

*தொழில்துறையில் முன்னேறிய மாநிலங்களை நோக்கி இந்தியாவின் பிற மாநிலத் தொழிலாளர்கள் பிழைப்பு தேடி செல்வது நீண்ட காலமாக நடந்து வருகிறது. ஒரு காலகட்டத்தில் தமிழ்நாட்டுத் தொழிலாளர்கள் மகாராஷ்டிரா, கர்நாடக மாநிலங்களுக்கு சென்றனர். மலேசியா, பிஜி தீவு, ஸ்ரீலங்கா நாடுகளுக்கும் தோட்டத் தொழிலாளர்களாக சென்றிருக்கின்றனர். தஞ்சை டெல்டா பகுதி விவசாயத் தொழிலாளர்கள் கூட கூலி அதிகம் என்பதால் விவசாய வேலைகளுக்கு மாதக்கணக்கில் கேரளா செல்வது இன்றளவும் நடந்து வருகிறது. வளைகுடா நாடுகளுக்கும் சிங்கப்பூர் அமெரிக்கா போன்ற மேற்கத்திய நாடுகளுக்கும் திறன் பெற்ற தமிழக தொழிலாளர்கள் பணி நிமித்தம் சென்று வருகிறார்கள். இந்தியாவில் தமிழ்நாடு முன்னேறிய மாநிலங்கள் வரிசையில் உள்ளது கட்டுமானம், ஜவுளி, ஆட்டோமொபைல் போன்ற தொழில் துறைகளிலும் மருத்துவமனை, ஓட்டல் போன்ற சேவைத் துறைகளிலும் உடல் உழைப்புத் தொழிலில் வட மாநில, வடகிழக்கு மாநில தொழிலாளர்கள் பணிக்கமர்த்தப்படுகின்றனர். குறைந்த கூலி கொடுத்து, பணி நேரத்தை நீட்டித்து, சமூகப் பாதுகாப்பு உத்தரவாதங்கள் இல்லாமல் முதலாளிகள் பெரும் சுரண்டலில் ஈடுபடுகிறார்கள். கிட்டத்தட்ட 10 லட்சத்திற்கும் மேற்பட்ட வெளி மாநிலத் தொழிலாளர்கள், முக்கியமாக தமிழ்நாட்டின் உள்கட்டுமான பணிகளில், இதர உற்பத்தி ஆலைகளில் பணிபுரிந்து வருகின்றனர் என ஒரு மதிப்பீடு உள்ளது.*

*ஏஐசிசிடியு உட்பட தமிழ்நாட்டின் இடதுசாரி தொழிற்சங்கங்கள் புலம்பெயர்ந்த தொழிலாளர் களின் கௌரவமான கூலி, பணி நிலைமைகள், சமூக பாதுகாப்புக்கான பிரச்சார இயக்கங்களை தொடர்ந்து முன்னெடுத்து வருகின்றன. மாநிலம் விட்டு மாநிலம் புலம்பெயர்ந்த தொழிலாளர் சட்டம் 1979 காறாராக அமல்படுத்த வேண்டும் எனக் கோரியும் வருகின்றனர். புலம்பெயர்ந்த தொழிலாளர் சட்டத்தில் தொழிலாளர் களுக்கான குடிநீர் வசதி, கழிப்பிட வசதி முதல் குடியிருப்பு, குழந்தைகள் காப்பகம், குழந்தைகளுக் கான கல்வி வரை உத்தரவாதம் செய்ய வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் ஏட்டளவில் உள்ள சட்டமும் புதிய தொழிலாளர் சட்டத் தொகுப்புகள் அமலாக்கத்திற்கு வரும்போது என்னவாகும் என்று தெரியவில்லை. இப்போது ஒரே நாடு ஒரே ரேஷன் கார்டு திட்டம் வந்திருப்பதால் புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் பொது விநியோகத் திட்டத்தை பயன்படுத்த முடியும்.*

*இந்த நாட்டை கட்டி எழுப்பும் தொழிலாளர் களுக்கு, மக்களுக்கு பல்வேறு சேவைகளை வழங்கி வரும் தொழிலாளர்களுக்கு கவுரவமிக்க வாழ்க்கையை உத்தரவாகம் செய்வதற்கு பதிலாக இன்று பல பெரு நகரங்களில் புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் ஆக்கிரமிப்பாளர்களாக சித்தரிக்கப்பட்டு அவர்களின் குடியிருப்புகளை அரசாங்கமே புல்டோசர் கொண்டு இடித்து காலி செய்வது நடந்தேறி வருகிறது. ரயில் போக்குவரத்து சிறப்பாக நடைபெற இவர்கள் தங்கள் உயிரை பணயம் வைத்து தண்டவாளங்கள் போடுவது, பாலங்கள் கட்டுவது, மின்தடப்பாதை அமைப்பது, மெட்ரோ ரயில் கட்டமைப்பு திட்டங்கள் என சகல வேலைகளையும் செய்கிறார்கள். ஆனால் இவர்களோ ஆடு மாடுகளை போல் சொந்த ஊருக்கு ரயில்களில் பயணிக்கும் நிலையே உள்ளது. லட்சக்கணக்கான மக்கள் புலம்பெயர்ந்து வந்து செல்லும் போது அவர்களுக்கு பாதுகாப்பான ரயில் பயணத்தை உத்தரவாதம் செய்வது அரசாங்கத்தின் கடமையாகும். அதைச் செய்ய தவறுவதால் முன்பதிவு செய்த பயணிகளுக்கும் புலம்பெயர்ந்த தொழிலாளர்களுக்கு மிடையிலான பிரச்சனையாக அது மாறுகிறது.*

தமிழ்நாட்டில் வட நாட்டுக்காரர்களால் தமிழர்களின் வேலை பறிபோகிறது என்ற குரல்கள் ஒலிக்கின்றன. தமிழக உழைப்பாளி மக்கள் கூடுதல் வருமானம் தரும் திறன் மிகுந்த வேலைகளை நோக்கிச் செல்கிறார்கள் அல்லது அபரி மிதமாக வளர்ந்துள்ள ஓலா, உபர், அமேசான், சோமட்டோ என சேவைத் துறைகளில், வேலை நேரத்தில் இலகுத் தன்மை உள்ள பணிகளை தேர்ந்தெடுக்கின்றனர். குறைந்தபட்சக் கூலி சட்டத்திலிருந்து பல்வேறு நலச் சட்டங்களை அனைவருக்கும் கறாராக அமல்படுத்து வதற்கு குரல் கொடுப்பதற்கு பதிலாக, வட மாநிலத்தவர் வருகையால் கூலியின் மட்டம் குறைகிறது என பார்க்கும் தவறான போக்கு நிலவுகிறது.

இன்னொரு பக்கம் நிலையான வருமானம் தரும் ரயில்வே, நெய்வேலி நிலக்கரி சுரங்கம் போன்ற மத்திய அரசு நிறுவனங்களில் திட்டமிட்டு தமிழர்களின் வேலைவாய்ப்பைப் பறிக்கும் முயற்சிகள் நடந்து வருகிறது. அதனால் தமிழ்நாட்டு வேலைவாய்ப்பில் 90% பணிகள் தமிழர்களுக்கே வழங்க வேண்டும் என்ற ஜனநாயக குரல் அனைத்து இடது முற்போக்கு சக்திகளின் ஆதரவை பெற்று முன்னுக்கு வந்துள்ளது.

இந்தப் பின்னணியில் குழம்பிய குட்டையில் மீன் பிடிக்கும் விதமாக பல வகைப்பட்ட வலதுசாரி பிற்போக்கு சக்திகள் உழைக்கும் மக்களிடம் பிளவை ஏற்படுத்தும் நோக்கத்தோடு செயல்பட துவங்கி யுள்ளனர். தமிழ்நாட்டில் இந்தி பேசும் பீகார் மாநில தொழிலாளர் மீது தாக்குதல் என போலி காணொளிக் காட்சிகளை வெளியிட்டு அரசியல் ஆதாயம் தேடும் முயற்சியில் இறங்கிய காவி பாசிச சக்திகள் இன்று அம்பலப்பட்டுப் போய் உள்ளனர். விஷமப் பிரச்சாரத்தில் ஈடுபட்டவர்கள் ஆதாரத்தோடு கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். ஆட்சி அதிகாரத்தில் இருக்கும் காவி பாசிச சக்திகள் கொரோனா காலத்தில் புலம்பெயர்ந்த தொழிலாளர்களை நடத்திய விதம் நாடறிந்தது. அப்போது கூட தமிழகத்திலிருந்த புலம்பெயர்ந்த தொழிலாளர்களின் உணவுக்கு, இருப்பிடத்திற்கு, அவர்கள் கண்ணியமான முறையில் ஊருக்கு திரும்பிச் செல்வதற்கு என்று எல்லா வகையிலும் இகக (மாலெ), ஏஐசிசிடியு உள்ளிட்ட உழைக்கும் மக்கள் நலனில் உண்மையான அக்கறை உள்ள அனைவரும் களப்பணி ஆற்றியதை பார்த்தோம். பொய், புரட்டு, விஷம பிரச்சாரம் என எல்லா தகிடுதித்தங்களையும் செய்து, மொழி ரீதியான வெறுப்புணர்வை தமிழக மக்களுக்கு எதிராக திருப்ப வலதுசாரி பாசிச சக்திகள் எடுக்கும் முயற்சி பலனளிக்காது.

நாணயத்தின் இன்னொரு பக்கமாக தமிழர் பெருமிதம் பேசி இனவாத வெறுப்பு அரசியலை தமிழ் மண்ணில் விதைக்க எடுக்கப்படும் முயற்சிகளையும் தமிழக உழைக்கும் மக்கள் அனுமதிக்க மாட்டார்கள். ஒரு சில குற்றச் சம்பவங்களில் வடமாநில தொழிலாளர்கள் ஈடுபட்டதை வைத்துக் கொண்டு ஒட்டுமொத்த புலம்பெயர்ந்த தொழிலாளர்களையும் குற்றக் கும்பல் போல் சித்திகரிக்கும் முயற்சி நடைபெறுகிறது.

இந்திய உழைக்கும் மக்களின் துன்ப துயரங் களுக்கு காரணமான பாஜக, தமிழக மக்களை இந்தி பேசும் மாநில தொழிலாளர்களுக்கு எதிராக நிறுத்தி எப்படி ஆதாயம் தேட முடியாதோ அதுபோல் இனவாத வெறுப்பு அரசியலைக் கொண்டு தமிழர் வாழ்வியலை தமிழர் பண்பாட்டை பாதுகாக்க முடியாது.

உழைக்கும் மக்களின் ஒற்றுமையை கட்ட மைத்து பாசிச சக்திகளை, இனவெறுப்பு அரசியல் சக்திகளை வேரறுப்பதன் மூலம் மட்டுமே அனைத்து வகை மேலாதிக்கத்துக்கும் முடிவு கட்ட முடியும்.

## கட்டுமானத் தொழிலாளர் சம்மேளன நிர்வாகிகள் கூட்டம்

அகில இந்திய கட்டுமானத் தொழிலாளர் சம்மேளனத்தின் அகில இந்திய நிர்வாகிகள் கூட்டம் 25.03.2023 அன்று கொல்கத்தாவில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் தமிழ்நாட்டில் இருந்து அகில இந்திய துணைத் தலைவர் தோழர் கொ.கோவிந்தராஜ், அகில இந்திய செயலாளர் தோழர் சொ.இரணியப்பன் ஆகியோர் கலந்து கொண்டு தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர்கள் சந்திக்கும் பிரச்சனைகள் குறித்து எடுத்துக் கூறினர். ஏஐசிசிடியு அகில இந்திய தலைவர் தோழர் வீ.சங்கர், கட்டுமானத் தொழிலாளர் சம்மேளனத்தின் தேசியத் தலைவர் தோழர் சோ.பாலசுப் பிரமணியன் ஆகியோர் கலந்து கொண்டனர். ❑



# மோடி ஆட்சியால் கட்டவிழ்த்து விடப்படும் தங்கு தடையற்ற அவசரநிலையை எதிர்ப்போம்

## திபங்கர்

திரிபுராவில் குறுகிய வெற்றியில் அதிகாரத்தை தக்கவைத்துக் கொண்ட மோடி அரசாங்கம், இந்தப் பாசிச ஆட்சியின் அடையாளமாக மாறியுள்ள தெரு அதிகாரம், பரப்புரை, அரசு அதிகாரம் ஆகியவற்றின் கொடிய சேர்க்கையை பயன்படுத்தி, எதிர்க்கட்சிகளுக்கு எதிராக முழுமையான தாக்குதலைத் தொடங்கியுள்ளது. திரிபுராவில் ஒப்பீட்டளவில் அமைதியான தேர்தலுக்குப் பிறகு, எதிர்க்கட்சிகளை, அவர்களுக்கு வாக்களித்தவர்களை, அச்சத்தில் உறைந்து போயிருக்கும் அந்த மாநிலத்தைப் பார்க்கச் சென்ற இடதுசாரிகள், காங்கிரஸ் எம்.பி.க்கள், எம்.எல்.ஏக்களின் உண்மையறியும் குழுவினரை குறிவைத்து, தேர்தலுக்குப் பிந்தைய பயங்கரம், பழிவாங்குதல், வன்முறை ஆகியவற்றின் புதுப்பிக்கப்பட்ட ஆட்சியை சங்கப் படைப்பிரிவு கட்டவிழ்த்து விட்டுள்ளது. அதே நேரத்தில், மாநில சட்டமன்றத்தில் பாஜக அல்லாத முன்னணி கட்சியாகத் தேர்தலில் வெளிப்பட்ட பிராந்தியக் கட்சியான திப்ரா மோதாவினுடைய எதிர்ப்பின் கூர்மையை மழுங்கடிக்க, அந்தக் கட்சியின் கோரிக்கைகளுக்கு "அரசமைப்புச் சட்டத் தீர்வை"க் கண்டறிய, மோடி அரசாங்கம் ஒரு கலந்துரையாடுபவரை நியமிக்க ஒப்புக்கொண்டது போல் தெரிகிறது.

மேகாலயாவில், அது கூட்டாளியாக இருந்த தேசிய மக்கள் கட்சி தலைமையிலான மாநில அரசாங்கத்தை, மிகவும் ஊழல்மிக்கதென கண்டித்து பாஜக தனியாக தேர்தலில் போட்டியிட்டது. இரண்டு இடங்களில் மட்டுமே வெற்றி பெற முடிந்த பாஜக, தேர்தல் முடிந்ததும், மீண்டும் அதே தேசிய மக்கள் கட்சியுடன் இணைந்து ஆட்சியில் அங்கம் வகிக்கிறது. அசாமில் தருண் கோகோய் தலைமையிலான காங்கிரஸ் ஆட்சியில், ஹிமந்தா பிஸ்வா சர்மா அதிகாரத்தின் இரண்டாம் இடத்தில் இருந்தபோது அவருக்கு எதிரான பாஜகவின் ஊழல் குற்றச்சாட்டுகளை நாம் மறக்கவில்லை. ஹிமந்தா பிஸ்வா சர்மா பாஜகவில் சேர்க்கப்பட்ட பிறகு, அவர் மீதான ஊழல் குற்றச்சாட்டுகள் குறித்து ஊடகங்களை எதிர்கொண்ட அமித் ஷா, அந்தக் கேள்விகளுக்கு பதிலளிக்க மறுத்து, இதுபோன்ற கேள்விகளைக் கேட்கக்கூடாது என்று வெட்கமின்றி ஆணவத்துடன் பத்திரிகையாளர்களிடம் கூறினார்! இன்று ஹிமந்தா பிஸ்வா சர்மா அசாமின் தற்போதைய முதல்வராகவும், பாஜக தலைமையிலான வடகிழக்கு ஜனநாயகக் கூட்டணியின் தலைவராகவும் மட்டுமல்ல, அவர் வடகிழக்கில் சங்கப் படையின் பாசிசத் தாக்குதலை முன்னின்று நடத்துபவராக உள்ளார்.

ஊழல் மற்றும் பல்வேறு குற்றங்களில் குற்றம் சாட்டப்படும் ஒவ்வொரு தலைவருக்கும் பாஜகவில் சேர்வது என்பது மிகவும் பலனளிக்கும் காப்பீட்டுத் திட்டமாக மாறியுள்ளது. உண்மையில், பல பாஜக தலைவர்கள் தங்களை எந்தவொரு மத்திய நிறுவனமும் விசாரணையில் இருந்து பாதுகாத்திடும் என வெளிப்படையாக மார்தட்டிக் கொள்கின்றனர். கர்நாடகாவில், 6 கோடி ரூபாய் பணம் கைப்பற்றப்பட்ட, சக்தி வாய்ந்த பாஜக சட்டமன்ற உறுப்பினரின் மகன் அலுவலகத்தில் சோதனை நடத்த லோக் ஆயுக்தா ஊழியர்கள் அழுத்தம் கொடுக்க வேண்டி இருந்தது. மத்திய பிரதேசத்தில், விசாரணைகள் போதுமான ஆதாரங்களை அளித்துள்ள போதிலும், குற்றச்சாட்டுகளை முன்வைக்க அரசாங்கம் அனுமதி வழங்காததால், லோக் ஆயுக்தா செயலிழக்கச் செய்யப்பட்டுள்ளது. இப்படியாக, பாஜக ஊழல்வாதிகளுக்கு நிச்சயமான புகலிடமாக மாறி இருக்கிறது போது, அதன் அரசியல் நிகழ்ச்சி நிரலுக்கு சேவை புரிய இந்த ஆட்சியால் முழுவதும் ஆயுதமயமாக்கப்பட்டுள்ள அமலாக்க இயக்குனரகம், மத்திய புலனாய்வுத் துறை போன்ற மத்திய நிறுவனங்களைக் கொண்டு மோடி அரசாங்கம் எதிர்க்கட்சிகளை வேட்டையாடுகிறது. ஏறக்குறைய அனைத்து எதிர்க்கட்சிகளும், குறிப்பாக அதிகாரத்தில் உள்ளவை, இந்த வெட்கக்கேடான மோடி ஆட்சியின் பழிவாங்கல், துன்புறுத்தல் நடவடிக்கைகளுக்கு ஆளாகியுள்ளன.

2024 தேர்தலுக்கு முன்னதாக, குறிப்பாக பீகாரில் ஏற்பட்டுள்ள அரசியல் மறுஅணிசேர்க்கை குறித்து மோடி ஆட்சி கவலை கொண்டுள்ளது. 2015 இல் நிதிஷ் குமாரின் ஐக்கிய ஜனதா தளத்தின் ஆதரவின்றி சட்டமன்றத் தேர்தலில் பாஜக போட்டியிட்ட போது, அது பெற்ற இடங்களின் எண்ணிக்கை 53 ஆகக் குறைந்தது. ராஷ்டிரிய ஜனதா தளம் தலைமைக்கு எதிராக ஊழல் குற்றச்சாட்டுகளை எழுப்பி, ஐக்கிய ஜனதா தளம்-ராஷ்டிரிய ஜனதா தளம் கூட்டணியை உடைப்பதில் இந்த ஆட்சி வெற்றிபெற்றது. மீண்டும்

இணைந்த பாஜக-ஐஜத-லோஜக கூட்டணி 2019 மக்களவைத் தேர்தலில் பீகாரில் பெரும் வெற்றியைப் பெற்றது. 2022 இல் ஐஜத மீண்டும் ராஜத, இடதுசாரி, காங்கிரஸ் மகா கூட்டணியில் இணைந்ததால், பீகார் கூட்டணியை உடைக்க பாஜக கூடுதல் நேரம் வேலை செய்து முயற்சித்து வருகிறது. அரசாங்கத்தை சீர்குலைப்பது, கூட்டணியை இழிவுபடுத்துவது, கட்சிகளைப் பிளவுபடுத்துவதன் மூலமும் புதிய கூட்டாளிகளை இணைத்துக் கொள்வதன் மூலமும் பாஜகவுக்கு ஆதரவான அரசியல் மறு அணிசேர்க்கையை உருவாக்குவது என்ற மும்முனை வியூகம் அதன் நோக்கமாக உள்ளது. லாலு பிரசாத் யாதவின் முழு குடும்பத்தையும் குறிவைத்து பழைய வழக்குகள் மீண்டும் வெளியே எடுக்கப் பட்டுள்ளன. மேலும் பீகாரின் ஆளும் கூட்டணி தமிழகத்தில் ஆளும் கட்சியுடன் நட்பு கொண்டுள்ள போதும், தமிழ்நாட்டில் பீகாரி தொழிலாளர்கள் தாக்கப்பட்டு, கொல்லப் பட்டதாக பாட்னாவில் போலி வீடியோக்கள் படமாக்கப்பட்டு, சமூக ஊடகங்களில் வைரலாக் கப்பட்டு, பொய்யான கதையை உருவாக்கியுள்ளனர்.

கருப்புப் பணத்தின் மீதான போராக முன்னிறுத்தப்பட்ட நவம்பர் 2016 பணமதிப்பிழப்பு நடவடிக்கை போன்ற ஊழல் எதிர்ப்பு போராட்டத்தின் காட்சியை உருவாக்க அமலாக்க இயக்குனரக திடீர்சோதனைகளை அரசாங்கம் பயன்படுத்துகிறது. இந்தச் சோதனைகள் பரவலாகப் பரப்புரை செய்யப்படுகின்றன. பெரும்பாலும் அமலாக்க இயக்குனரகம் ஒரு திடீர்சோதனையின் உண்மையான விளைவு குறித்து அதிகாரப்பூர்வமாக எந்த அறிக்கையையும் வெளியிடாத அதே வேளையில், பெயரிடப்படாத 'ஆதாரங்களை' மேற்கோள் காட்டி கைப்பற்றப்பட்ட சொத்துக்களின் சரிபார்க்கப்படாத தகவல்களுடன், ஊழல் பற்றிய ஒரு கருத்து ஊடகங்களால் உருவாக்கப்படுகிறது. நாடாளு மன்றத்தில் அரசாங்கம் தானே ஒப்புக்கொண்ட படி, 31 மார்ச் 2022 வரை அமலாக்க இயக்குனரகத்தால் எடுத்துக் கொள்ளப்பட்ட 5422 பணமோசடி வழக்குகளில், 992 வழக்குகளில் மட்டுமே குற்றப்பத்திரிக்கைகள் தாக்கல் செய்யப்பட்டு, குற்றம் சாட்டப்பட்ட 23 பேர் மட்டுமே தண்டனை பெற்றுள்ளனர். அமலாக்க இயக்குனரக நடவடிக்கையின் பெரும்பகுதி பரப்புரையின் மூலம் பொதுக் கருத்தை மாற்றியமைத்தல், அரசியல் எதிரிகளை மிரட்டுதல், இழிவுபடுத்துதல், ஊடகங்களின் விமர்சனக் குரல்களை அடக்குதல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டுள்ளது எனத் தெளிவாகிறது. பெரும்பாலான நிறுவனங்கள், முகமைகளைப் போலவே, அமலாக்க இயக்குனரகமும் அவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்க அதிகாரியால் இயக்கப்படுகிறது என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும். 2021 நவம்பரில் அமலாக்க இயக்குனரகம், மத்திய புலனாய்வுத் துறைத் தலைவர்களின் இரண்டு ஆண்டுகள் பதவிக் காலத்தை ஐந்து ஆண்டுகளாக நீட்டிக்க அரசாங்கம் சட்டத்தில் திருத்தம் செய்தது. பின்னர் தற்போதைய அமலாக்க இயக்குனரகத் தலைவர் சஞ்சய் மிஸ்ராவுக்கு உச்ச நீதிமன்ற உத்தரவை மீறி மூன்றாவது முறையாக நீட்டிப்பு வழங்கியது.

மோடி அரசாங்கத்தின் இந்தத் தீங்கிழைக்கும், அடக்குமுறை ஆட்சியை அறிவிக்கப்படாத அவசர நிலை என்று விவரிப்பது மட்டும் போதாது. அதுவொரு தங்கு தடையற்ற அவசரநிலையாகும். இந்திய மக்களும் எதிர்க்கட்சிகளும் அதற்கு கடிவாளம் இட முடியாவிட்டால், சர்வாதிகார ஆட்சியின் வெட்கக்கேடான காட்சியை நோக்கி நாம் செல்கிறோம் என்றே பொருளாகும். 1970களில், அவசர நிலையை ஒழித்துக் கட்டி, முன்னேற இந்தியாவுக்கு வலு இருந்தது. 2020 களிலும், நாடாளுமன்ற ஜனநாயகத்தை தகர்க்கும் வளர்ந்து வருகிற பாசிசத்தை தடுத்து நிறுத்த, வெகுமக்களின் ஜனநாயக விருப்பத்தை நிச்சயமாக இந்தியா மீண்டும் உருவாக்கி, அறுதியிட வேண்டும்.

**லிபரேஷன், மார்ச்–ஏப்ரல் 2023**

**தமிழாக்கம் – செந்தில்**

## பல்வேறு அமைப்புகளில் இருந்து இகக(மாலெ)யில் இணைந்த தோழர்கள்

வேலூரில் பல்வேறு அமைப்புகளில் இருந்து நூற்றுக்கும் அதிகமான தோழர்கள் இகக(மாலெ) கட்சியில் இணைந்த நிகழ்ச்சி நடைபெற்றது. அந்த நிகழ்ச்சியில் இகக (மாலெ) மத்தியக்குழு உறுப்பினர் தோழர் சோ.பாலசுப்பிரமணியன், மாநிலக்குழு உறுப்பினர் தோழர் இரணியப்பன், தோழர்கள் சுகுந்தன் உள்ளிட்ட பல தோழர்கள் கலந்து கொண்டனர்.



# ராகுல் காந்தி பதவி பறிப்பு திட்டமிட்ட அரசியல் பழிவாங்கும் நடவடிக்கை, ஜனநாயகத்தின் மீதான தாக்குதல்

*(அனைத்திந்திய நீதிக்கான வழக்கறிஞர் சங்கம் AILAJ அறிக்கை)*

அரசியல் குற்றமயமாக்கல் என்பது இந்தியாவில் ஆழ்ந்த கவலை அளிக்கும் விசயமாக இருந்து வருகிறது. அது ஜனநாயகத்தில் நிறுவனங்களின் நம்பகத்தன்மைக்கு ஊறு விளைவிப்பதாகவுள்ளது. அப்படியிருக்கையில், மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம் 1951 நிறைவேற்றப்பட்டது. அந்தச் சட்டம் சிலவகை குற்றவியல் வழக்குகளில் தண்டனை பெற்ற, தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களின் பதவி பறிப்பை கட்டாயமாக்கியது. அவர்கள் அடுத்து வரும் தேர்தல்களில் போட்டியிடுவதையும் அந்த சட்டம் தடுக்கிறது. குற்றவியல் அவமதிப்பு வழக்கில் குஜராத் நீதித்துறை நடுவர் மன்றம் ராகுல் காந்திக்கு இரண்டு ஆண்டுகள் சிறைத் தண்டனை வழங்கியதையடுத்து அவரின் நாடாளுமன்ற உறுப்பினர் பதவி பறிக்கப்பட்டு இருப்பதைக் கொண்டு அரசியல் குற்றமயமாகி விட்டதாக எடுத்துக் கொள்ள முடியாது என்று அனைத்திந்திய நீதிக்கான வழக்கறிஞர் சங்கம் (அய்லாஜ்) நம்புகிறது. உண்மையிலேயே இந்தச் சம்பவமானது அரசியல் பழிவாங்கும் நடவடிக்கையாகும். இது ஜனநாயகத்தின் மீதான அதிர்ச்சி தரும் தாக்குதலைக் குறிக்கிறது.

முதலில் குற்றவியல் அவமதிப்புக்காக தண்டனை என்பது சட்டப் புத்தகத்திலிருந்து நீக்கப்பட வேண்டும். இந்திய தண்டனைச் சட்டம் 1860 இன் 499 மற்றும் 500 பிரிவுகள் அவமதிப்பை குற்றவியல் நடவடிக்கையாக வகைப்படுத்தி அவற்றுக்கு தண்டனையையும் குறிப்பிடுகின்றன. இவை நவீன இந்தியாவுக்கு பொருத்தப்பாடற்ற காலனிய மரபு சார்ந்தவை. குறிப்பாக இவை பேச்சுரிமை மற்றும் கருத்துரிமையை மீறுகின்ற செயலாகும். ராகுல் காந்தி வழக்கில் பார்த்ததைப் போல அவை தன்னிச்சையான அமலாக்கத்திலோ, குளறுபடியான குற்றவியல் விசாரணையாகவோ போய் முடிந்து விடுகிறது.

மிகவும் துரதிஷ்டவசமாக உச்ச நீதிமன்றம் சுப்பிரமணியசாமி எதிர் இந்திய ஒன்றியம் (2016-7 எஸ்சிசி221) வழக்கின் தவறான தீர்ப்பில் இந்த சட்டத்தின் செல்லுபடித் தன்மையை நிலைநாட்டி உள்ளது.

இரண்டாவதாக அவமதிப்பு வழக்கின் குற்றத்தன்மையைப் பொறுத்தவரை புகார்தாரர், தான் அவமதிப்பிற்கு உள்ளாக்கப்பட்டதாக நிலை நிறுத்த வேண்டும் என்று இருக்கிறது. ஒரு தனிப்பட்ட வகைப்பட்ட நபர்கள் குறித்து சொல்லப்பட்ட பொத்தாம் பொதுவான கருத்துக்களை வைத்துக் கொண்டு ஒருவர், தான் அதனால் பாதிக்கப்பட்டதாக சொல்ல முடியாது. இந்த வழக்கில் நிரவ் மோடி, லலித் மோடி, நரேந்திர மோடி என எப்படி எல்லா திருடர்களுக்கும் மோடி என்ற அடைமொழி பொதுவானதாக இருக்கிறது? என்று ராகுல் காந்தி சொல்லி இருந்தார் என்பதுதான். எப்படி இருந்த போதும் இந்தப் பேச்சில் பெயர் குறிப்பிட்டு சொல்லப்பட்ட நபர்களுக்கு பதிலாக புருனேஷ் மோடி என்ற சட்டமன்ற உறுப்பினர் மனுதாரராக நீதிமன்றத்தை நாடினார். அவர் மோடி என்ற அடைமொழி உள்ள அனைவரும் ராகுல் காந்தி பேச்சினால் அவமதிப்புக்குள்ளாக்கப்பட்டுள்ளனர் என வாதிட்டார். அந்த வாதம் சட்டப்படி தாக்குப்பிடித்து நிற்கக் கூடியது அல்ல.

மூன்றாவதாக இரண்டாண்டு தண்டனை விதிக்கப்பட்டிருப்பதை பார்க்கும்போது ஆட்சியாளர்களின் கை தீர்ப்பில் இருப்பது பட்டவர்த்தனமாக தெரிகிறது. குற்றவியல் அவமதிப்பு வழக்குக்கு அதிகபட்ச தண்டனையான இரண்டு ஆண்டுகள் விதிக்கப்படுவதை இதற்கு முன் கேள்விப் பட்டதில்லை.

மேலும் தண்டனை வழங்கப்பட்ட ஒரே நாளில் பதவி பறிப்பு என்று காட்டப்பட்ட வேகமும் இதுவரை கேள்விப்பட்டிராதது. கர்நாடக பாஜக எம்எல்ஏ நேரு ஓலேகர் (ஊழல் வழக்கில் இரண்டு ஆண்டு சிறை தண்டனை) கர்நாடக பாஜக சட்டமன்ற உறுப்பினர் எம்.பி குமாரசாமி (காசோலை மோசடி வழக்கில் நான்கு வருட சிறை தண்டனை) இருவரும் பிப்ரவரி 2023 தண்டனை பெற்றவர்கள். அவர்கள் மீது பதவி பறிப்பு நடவடிக்கை என்று எதுவும் இல்லை. இந்திய சட்ட ஆணையத்தின் 244 வது அறிக்கை லில்லி தாமஸ் தீர்ப்புக்குப் பிறகு இதுவரை தண்டனை பெற்றவர்களில் மூன்று சட்டமன்ற உறுப்பினர்களின் பதவி மட்டுமே பறிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கிறது.

பதவி பறிப்புக்கான கூறுகள் சேர்க்கப்பட்டதன் நோக்கத்தை இந்திய சட்ட ஆணையத்தின் "தேர்ந்தெடுக்கப்பட்ட பதவி பறிப்பு" (பிப்ரவரி 2014) என்று தலைப்பிட்ட அறிக்கை தொகுத்து அளிக்கிறது.

அந்த அறிக்கையில் "சமூகத்தின் குற்ற. பின்புலம்

கொண்டவர்கள், அதாவது தங்களுக்கு முந்தையவர்கள் நாடாளுமன்ற சட்டமன்ற அவைகளில் சட்டம் இயற்றி அதற்கு சட்ட அந்தஸ்து வழங்கியுள்ள போது, அடுத்து வரும் நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்கள் அதை அமலாக்கும் பொறுப்பு கொண்டுள்ள போது, அவர்களே அந்த சட்டங்களை மீறுகிறார்கள் என்ற குற்றச்சாட்டுக்கு ஆளாகும்போது அது சட்டம் இயற்றியவர்களின் தொலைநோக்குப் பார்வை, இந்திய ஜனநாயகத்தின் இயல்பு மற்றும் சட்டத்தின் ஆட்சிக்கு விரோதமானதாகி விடுகிறது." கீழ்கண்ட உச்ச நீதிமன்ற தீர்ப்புகளை ஒரு தொகுப்பாக படிக்கும்போது அரசியல் குற்றமயமாக்கப்படுவது பற்றிய பிரச்சினையை அது எப்படி சட்ட வியாக்கியானம் செய்கிறது என்பதை ஒருவர் தெளிவாக அறிந்து கொள்ள முடியும்.

லில்லி தாமஸ் எதிர் இந்திய ஒன்றியம்( (2013) 7 எஸ்சிசி 653) ல் உச்ச நீதிமன்றம் தண்டனை பெற்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் தங்கள் மேல் முறையீட்டு மனுக்களில் தீர்வு காணப்படும் வரை தாங்கள் பதவியில் தொடரலாம் என்ற சட்டத்தின் பிரிவு 8 (4)ஐ ரத்து செய்தது.

பொதுநல மையம் மற்றும் சிலர் எதிர் இந்திய ஒன்றியம் மற்றும் சிலர் (ஏஐஆர் 2018 எஸ் சி 4550) . நாட்டில் அதீத அளவில் அரசியல் குற்றமயமாகி வரும் பின்னணியை, அது போன்ற குற்றமயமாக்கல் பற்றி குடிமக்களுக்கு எந்த தகவலும் இல்லாததை கவனத்தில் கொண்ட உச்சநீதிமன்றம் தேர்தலில் போட்டியிடும் ஒவ்வொரு வேட்பாளரும் அவர்கள் மீது நிலுவையில் உள்ள வழக்குகள் குறித்த விவரங்களை தெரிவிக்க வேண்டும் என்று உத்தரவிட்டது.

ராம் பாபு சிங் தாகூர் எதிர் சுனில் அரோரா – மற்றவர்கள் (ஏஐஆர் 2020 எஸ்சி 952)

அரசியலில் குற்றவியல் பின்னணி கொண்டவர்களின் எண்ணிக்கை அச்சுறுத்தும் வகையில் அதிகரித்து வருவதையும், குற்றவியல் வழக்குகள் நிலுவையில் உள்ள வேட்பாளர்களை முதல் கட்டத்திலேயே ஏன் அரசியல் கட்சிகள் தேர்ந்தெடுக்கின்றன? என்பதற்கு எவ்வித விளக்கமும் அளிக்காத நிலையில் உச்சநீதிமன்றம், கட்சி வேட்பாளராக நிறுத்தும் நபர்கள் மீது நிலுவையில் உள்ள குற்றவியல் வழக்குகள் பற்றிய முழு விவரங்களையும் (குற்றத்தின் தன்மை அதோடு தொடர்புடைய மற்ற விவரங்களான குற்றப் பத்திரிகை தயார் செய்யப்பட்டதா இல்லையா என்ற விவரம், சம்பந்தப்பட்ட நீதிமன்றம், வழக்கு எண் இன்ன பிற) கட்சிகளின் வலைத்தளங்களில் பதிவேற்றம் செய்யப்பட வேண்டியது கட்டாயமானது என உத்தரவிட்டது. அதோடு கூடவே, சம்பந்தப்பட்ட நபர் ஏன் வேட்பாளராக தேர்ந்தெடுக்கப்பட்டார் என்றும் அது போல குற்ற வழக்கு இல்லாத பிற நபர்கள் ஏன் கட்சியால் தேர்வு செய்யப்படவில்லை என்றும் கூட தெரிவிக்க வேண்டும் என உத்தரவிட்டது.

அஸ்வினி குமார் எதிர் இந்திய ஒன்றியம் மற்றும் சிலர் ரிட் பெட்டிஷன் நம்பர் 699/2016 ல் 10.8.2021 தேதியிட்ட உத்தரவில் நாட்டின் பல பகுதிகளில் நடப்பில் நாடாளுமன்ற உறுப்பினராக, சட்டமன்ற உறுப்பினராக இருப்பவர்களுக்கு எதிராக நிலுவையில் உள்ள குற்றவியல் வழக்குகளை மாநில அரசாங்கங்கள் குற்றவியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 321 வழங்கியுள்ள அதிகாரத்தை பயன்படுத்தி திரும்ப பெற்று வருவதை சட்டரீதியாக கவனத்தில் எடுத்துக் கொண்ட (judicial notice) உச்ச நீதிமன்றம், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களாக இருப்பவர் மீது அல்லது ஏற்கனவே இருந்தவர் மீது உள்ள அரசு தரப்பு வழக்குகளை உயர் நீதிமன்ற அனுமதி இல்லாமல் ரத்து செய்யக்கூடாது என கூறியது.

மேலே கூறியுள்ளபடி, ராகுல் காந்தியின் வழக்கு என்பது அரசியலை குற்றமயமாக்கும் வழக்கு அல்ல. அது அரசியல் பழிவாங்கும் நடவடிக்கையே. பொதுநல பவுண்டேஷன் மற்றும் சிலர் எதிர் இந்திய ஒன்றியம் (ஏஐஆர் 2018 எஸ் சி 4550) வழக்கில் கடும் குற்றச் செயல்களில் ஈடுபட்டு குற்றச்சாட்டு குறிப்பானை தயார் செய்யப்பட்டுள்ள நபர்களை பதவி நீக்கம் செய்யவும், அது போன்றவர்களுக்கு போட்டியிட வாய்ப்பு அளிக்கக் கூடாது என்றும் உச்ச நீதிமன்றம் சொன்ன ஆலோசனைகளை ஏற்று நடைமுறைப்படுத்த இந்த அரசாங்கம் தவறிவிட்டது என்பது வெளிப்படையாக தெரிகிறது. பாஜக ஆளும் மாநிலங்களில் அதன் நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினருக்கு எதிரான குற்றவியல் வழக்குகளை அந்த மாநில அரசாங்கங்கள் திரும்பப் பெறுவது என்ற பல சம்பவங்களிலிருந்து அரசியல் ஆதாயத்திற்காக சட்டம் பயன்படுத்பயன்படுத்தப்பட்டிருக்கிறது என்பது தெளிவாகிறது. உதாரணத்துக்கு கர்நாடக பாஜக அரசாங்கம் சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், பல்வேறு பாஜக தலைவர்களுக்கு எதிரான 62 குற்றவியல் வழக்குகளை திரும்ப பெற பரிந்துரை செய்திருக்கிறது. காவல்துறை, சட்டத்துறை, அரசு தரப்பு வழக்குகளுக்கான செயலகம் ஆகிய அனைத்து அமைப்புகளும் தள்ளுபடி செய்யக்கூடாது என ஒட்டுமொத்தமாக கருத்து தெரிவித்த பின்பும்

இது செய்யப்பட்டிருக்கிறது. மைசூரில் நாடாளுமன்ற உறுப்பினர் திரு பிரதாப் சிம்கா, தற்போதைய சட்ட அமைச்சர் ஜே சி முனுசாமி, அப்போதைய சுற்றுலா அமைச்சர் சி. டி. ரவி, அப்போதைய விவசாய அமைச்சர் பி. சி. படீல், சட்டமன்ற உறுப்பினர் திரு ஆனந்த் சிங், திரு ஹல்லப்பா அசார், முதலமைச்சரின் அரசியல் செயலாளர் எம்.பி. ரேணுகாச்சாரியா ஆகியோர் உட்பட பலரும் அரசாங்கத்தின் இந்த முடிவால் பலன் அடைந்திருக்கிறார்கள்

இதற்கு எதிராக கர்நாடக உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யப்பட்டபோது உயர்நீதிமன்றம் தனது ஆகஸ்ட் 11, 2021 உத்தரவில் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் மீதான அரசியல் வழக்குகளை திரும்ப பெற அனுமதிக்க முடியாது என்று கூறிவிட்டது.

ராகுல் காந்தி தண்டிக்கப்பட்டது முதல் பதவி பறிப்பு வரையிலான தொடர் சம்பவங்கள் ஒருபுறம் ஜனநாயகத்தின் மீதான தாக்குதலாகவும் மறுபுறம் நீதித்துறை நடவடிக்கைகளை சீர்குலைக்கும் ஆட்சி துறையின் நடவடிக்கைகளாகவும் இருப்பதைப் பார்க்க முடிகிறது.

**மைத்ரியி கிருஷ்ணன்**
**தலைவர்**

**கிளிப்டன் டி ரொசாரியோ**
**பொதுச் செயலாளர்**

## கன்னியாகுமரியில் கண்டன ஆர்ப்பாட்டம்





இகக(மாலெ) கன்னியாகுமரி மாவட்ட செயலாளர் தோழர் எஸ்.எம்.அந்தோணிமுத்து மீது குற்றவியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 110ன் வழக்கு போடப்பட்டுள்ளதைக் கண்டித்தும் தலித் இஸ்லாமிய தோழர்கள் மீதும் போடப்பட்ட பொய் வழக்குகளைத் திரும்பப் பெறக் கோரியும் 21.03.2023 அன்று நாகர்கோவிலில் கண்டண கூட்டம் நடைபெற்றது. இகக(மாலெ) மத்தியக் கமிட்டி உறுப்பினர் தோழர் பாலசுந்தரம் சிறப்புரையாற்றினார். விசிக, மஜக, ரெட் ஸ்டார் புரட்சி பாரதம் கட்சித் தலைவர்களும் கலந்து கொண்டு கண்டன உரையாற்றினார்கள்.

## திருப்போரூரில் ஏஐசிசிடியு ஆர்ப்பாட்டம்



23.03.2023 அன்று செங்கற்பட்டு மாவட்டம் திருப்போரூர் ஒன்றியம் நெல்லிகுப்பம் அடுத்த கீழூர் கிராமத்தில் இயங்கி வரும் ஐஜிபி இன்ஜினியர்ஸ் பிரைவேட் லிமிடெட் தொழிற்சாலையில் பணிபுரியும் தொழிலாளர்கள் ஊதிய உயர்வு கேட்டார்கள் என்ற காரணத்திற்காக ஒப்பந்ததாரரால் 10 தொழிலாளர்கள் பணிநீக்கம் செய்யப்பட்டார்கள். இதற்கு நியாயம் கேட்டதால் 32 தொழிலாளர்களுக்கு நிர்வாகம் வேலை தர மறுத்தது. அதைக் கண்டித்து ஏஐசிசிடியு சார்பில் தொழிற்சாலை வாயிலில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஏஐசிசிடியு மாநில சிறப்புத் தலைவர் தோழர் சொ.இரணியப்பன் கண்டன உரையாற்றினார்.

# வைக்கம் போராட்ட நூற்றாண்டிலும் வரம்பின்றி தொடரும் வன்கொடுமைகள், மனித உரிமை மீறல்கள்

## ரமேஷ் கணபதி

கேரளாவின் கோட்டயம் மாவட்டம் வைக்கத்தில் உள்ள மகாதேவர் கோயிலைச் சுற்றி உள்ள தெருக்களில் தாழ்த்தப்பட்ட மக்கள், ஈழவர்கள், புலையர்கள், தீயர்கள் நடமாடத் தடை விதிக்கப் பட்டிருந்தது. அந்த மக்களை தடைவிதிக்கப் பட்டிருக்கும் தெருக்களில் 1924 மார்ச் 30 அன்று ஊர்வலமாக அழைத்துப் போகப் போவதாக அன்றைய கேரள காங்கிரஸ் கமிட்டியின் செயலாளர் கே.பி.கேசவ மேனன் அறிவிப்பு வெளியிட்டார். அப் போராட்டத்தைத் துவக்கியவர் வழக்கறிஞராக இருந்த டி.கே.மாதவன். தொட்டால் தீட்டு, பார்த்தால் பாவம் என்று இருந்த காலக் கட்டம் அது. அறிவித்தபடி தொண்டர்களுடன் அணி திரண்டனர். அந்தத் தெருவில் சென்று நின்றவர்கள் கைது செய்யப்பட்டார்கள். ஆனாலும் தொடர்ந்து நாள் தோறும் மூன்று பேர் என்று தெருவில் நுழைந்து போராட்டம் நடத்தினார்கள். திருவிதாங்கூர் அரசர் அவர்களைக் கைது செய்து சிறையில் அடைத்தார். நாட்கள் ஆக ஆக தலைவர்களும் கைது செய்யப்பட்டு சிறையிலடைக்கப்பட்டார்கள். டி.கே.மாதவன், கே.பி.கேசவ மேனன், ஜார்ஜ் ஜோசப் ஆகியோரும் கைது செய்யப்பட்டார்கள். தொடர்ந்து போராட் டத்தைத் தலைமையேற்று நடத்த தமிழ்நாட்டில் இருந்து பெரியார் வர வேண்டும் என அழைப்பு விடுத்தார்கள். பெரியார் அன்று காங்கிரஸ் கட்சித் தலைவராக இருந்தார். 1924 ஏப்ரல் 13ம் தேதி பெரியார் முதன் முதலாக வைக்கம் சென்றார். திருவிதாங்கூர் அரசர் பெரியாரின் நண்பர் என்பதால் பெரியாருக்கு அரச மரியாதை அளித்து வரவேற்றார். ஆனால், பெரியார், நான் அரசுக்கு எதிராகப் போராட வந்திருக்கிறேன், உங்கள் நண்பராக வரவில்லை என்று அந்த அரச மரியாதையை, வரவேற்பை மறுத்து விட்டார். பெரியார் தலைமையில் போராட்டம் உத்வேகமடைந்தது. அரசர் பெரியார் பேச தடை விதித்தார். பின்னர் நுழைய தடைவிதித்தார். பின்னர் கைது செய்து சிறையிலடைத்தார். ஒரு மாத கால சிறைவாசத்திற்குப் பின்னர் வெளியே வந்த பெரியார் மீண்டும் போராடச் செல்கிறார். மீண்டும் கைது, சிறை. 140 நாட்கள் வைக்கத்தில் இருந்த பெரியார் 70 நாட்களுக்கு மேல் சிறையில்தான் இருந்துள்ளார். இந்தப் போராட்டம் காந்தியின் வழிகாட்டுதலில் நடந்தது என்றாலும் போராட்ட வழிமுறையில் சில மாற்றுக் கருத்துகளும் கூடவே இருந்துள்ளன. காந்தி 1925 மார்ச் மாதம் வைக்கம் வருகிறார். ராணியிடம் பேசுகிறார். போராட்டம் 1925 நவம்பர் 23ல் முடிவு பெற்றது. போராட்டக் களத்தில் மக்களோடு மக்களாக நின்று போராடியவர் பெரியார். இந்தப் போராட்டம்தான் பிற்காலத்தில் பல்வேறு போராட்டங்களுக்கு குறிப்பாக கோயில் நுழைவுப் போராட்டங்களுக்கு முன்மாதிரியாக மாறியது. வைக்கம் போராட்டம்தான் தனக்கு உணர்வூட்டியதாக அம்பேத்கர் கூட 1936ல் மகர் போராட்டத்தின் போது கூறியிருக்கிறார்.

அந்த வரலாற்றுச் சிறப்பு மிக்கப் போராட்டத்தின் நூற்றாண்டு துவக்க விழாவில் தமிழ்நாடு முதல்வர் ஸ்டாலினும் கேரள முதல்வர் பினரயி விஜயனும் சேர்ந்து கலந்து கொண்டார்கள். இந்த விழாவில் பேசிய தமிழ்நாடு முதல்வர் ஸ்டாலின், “சுயமரியாதை, பகுத்தறிவு, சமதர்மம், சமத்துவம், மானுடப்பற்று, ரத்தபேதமின்மை, பால் பேதமின்மை, சுய முன்னேற்றம், பெண்கள் முன்னேற்றம், சமூகநீதி, மதச்சார்பற்ற அரசியல், அறிவியல் மனப்பான்மை இவைகள்தான் பெரியாரியத்தின் அடிப்படை. இது உலகம் முழுவதுக்குமான கருத்தியல், இந்தக் கருத்தியல்களை வென்றெடுக்க நாம் அனைவரும் உழைத்தாக வேண்டும். மீண்டும் சனாதன-வர்ணாசிரம- சாதியவாத- மதவாத சக்திகள் கோலோச்ச நினைக்கும் காலத்தில் நமக்கு இந்தக் கடமை அதிகம் இருக்கிறது” என்று பேசினார்.

ஆனால், முற்போக்கு விழுமியங்களுக்கு பெயர் பெற்ற தமிழ்நாட்டில், பெரியாரின் வழியில் ஆட்சி நடப்பதாகச் சொல்லிக் கொள்ளும் தமிழ்நாட்டில் சாதியாதிக்க வன்கொடுமைகளும் படுகொலைகளும் பெண்கள் மீதான பாலியல் வன்முறைகளும் காவல்துறையின் அத்துமீறல்களும் மனித உரிமை மீறல் குற்றங்களும் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டிருக்கின்றன. ருக்மணி தேவி உருவாக்கிய கலாச்சேத்ரா கல்லூரியில் இன்று ஆசிரியர்கள் பாலியல் துன்புறுத்தலில் ஈடுபட்டார்கள் என்று மாணவிகள் புகார் அளித்துள்ளார்கள். பேராசிரியர் ஹரிபத்மன் கைது செய்யப்பட்டுள்ளார். ஆனால், இதற்கு முன்பு பள்ளி, கல்லூரிகளில் நடைபெற்ற மாணவிகளுக்கு எதிரான பாலியல் குற்றங்களில் எத்தனை பேர்களுக்கு தண்டனை கிடைக்கப் பெற்றுள்ளது? கடந்த ஐந்து ஆண்டுகள் 2021 டிசம்பர் வரை 7293 போக்சோ வழக்குகள் நிலுவையில் இருந்ததாக ஒரு புள்ளி விவரம் கூறுகிறது. அந்த வழக்குகளில் வெறும் 10% மட்டுமே தீர்வு காணப்பட்டுள்ளதாகச் சொல்லப்படுகிறது. பாலியல் குற்றங்கள் அதிகமாக நடக்கும் மகாராஷ்டிரா, உத்தரப்பிரதேச மாநிலங்களுக்கு அடுத்தபடியாக

மூன்றாவது இடத்தில் தமிழ்நாடு உள்ளது. இன்னும் பதியப்படாத வழக்குகள் பல உள்ளன. கலாசேத்ரா கல்லூரியில் பாலியல் குற்றத்தில் ஈடுபட்ட ஆசிரியர்கள் நான்கு பேரைக் கைது செய்யக் கோரி இரவு பகலாக மாணவர்கள் நான்கு நாட்கள் போராட்டம் நடத்திய பின்னர்தான் காவல்துறை கண்டு கொண்டது. கள்ளக்குறிச்சி மாணவி ஸ்ரீமதியின் மரணத்திற்கு இன்று வரை நியாயம் கிடைக்கவில்லை. குடி தண்ணீரில் மலத்தைக் கலந்த குற்றவாளிகள் இதுவரை கைது செய்யப்பட வில்லை. தென்காசி மாவட்டம் அரியநாயகிபுரம் பள்ளிக்கூடத்தில் தலித் மாணவர் மரணத்திற்குக் காரணமான குற்றவாளிகள் தண்டிக்கப்படவில்லை. திருநெல்வேலி மாவட்டம் பணகுடியில் தலித் மக்கள் தங்களுக்கென ஒதுக்கப்பட்ட சுடுகாட்டில் கூட இறந்தவர்களை அடக்கம் செய்யவிடாமல் ஆதிக்க சாதியினர் தடுத்து அட்டூழியம் செய்கிறார்கள். அவர்களுக்கு மாவட்ட நிர்வாகமும் காவல்துறையும் துணை போகிறது.

பாலியல் குற்றங்கள் அதிகரிப்பதற்கு பெண்கள் வெளியே வருவதும் பெண்களின் உடைகளும் காரணம் என்று சங்கிக் கூட்டங்கள் ஒரு புறம் கத்திக் கொண்டிருக்க, நீதிமன்றங்கள் கூட அதற்கு ஏற்ற சில கருத்துக்களை வழங்கிக் கொண்டிருக்கின்றன. இந்திய அரசியலமைப்புச் சட்டம் பிரிவு 21 வழங்கியுள்ள திருமணம் செய்யாமலே சேர்ந்து வாழும் உரிமைதான் இந்த பாலியல் குற்றங்களுக்குக் காரணம் என்றும் அதனால் லிவ்-இன்-ரிலேஷன்சிப்பை தடை செய்ய வேண்டும் என்று மத்திய பிரதேச உயர்நீதிமன்றம் கூறியது. அப்படி என்றால், பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் நடக்கும் பாலியல் குற்றங்களுக்கு யார் காரணம்? பெண்கள் படிக்க வருவதுதான் காரணம் என்றுகூட கூறுவார்கள் போலும்.

உண்மையில் இதுபோன்ற குற்றங்களுக்கு பெரியாரின் கொள்கைகள் முழுமையாக மக்களிடத்தில் கொண்டு செல்லப்படாமையும் சனாதன சங்கிகளின் மூடத்தன பிற்போக்கு செயல்பாடுகள் தமிழ்நாடு முழுவதும் அதிகரித்துக் கொண்டிருப்பதும் ஒரு காரணமாகும். காலச்சாரக் காவலர்களாக வேஷம் போடும் சங்கிகளின் ஆளுகையின் கீழ் உள்ள இடங்களில்தான் இந்தக் குற்றங்கள் அதிகரித்துக் கொண்டிருக்கின்றன. கலாச்சேத்திராவில் இயக்குநராக உள்ள ரேவதி ராமச்சந்திரனின் கணவர் ஆர்எஸ்எஸ் பொறுப்பில் உள்ளவர். அவர் சொல்படிதான் அந்த கல்லூரி நடந்து கொண்டிருக்கிறது. அதனால்தான் அங்குள்ள ஆசிரியர் மீது கல்லூரி நிர்வாகத்திடம் புகார் அளித்தும் நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. அதிகமான பாலியல் வழக்குகளில் சிக்குபவர்கள் பாஜகவினர் என்று ஒரு அறிக்கை கூறுகிறது. இது ஒருபுறமிருக்க கூட்டுப் பாலியல் குற்றங்கள் அதிகரித்துக் கொண்டிருக்கின்றன. பொள்ளாச்சி, சென்னை, காஞ்சிபுரம் என்று நீண்டு கொண்டே போகின்றன. இந்தக் குற்றங்கள் அதிகரிப்பிற்கு காவல்துறையினரின் மெத்தனப் போக்கும் அராஜப் போக்குமே முக்கிய காரணமாக இருக்கின்றது.

தமிழ்நாட்டில் காவல்துறை தமிழ்நாடு முதல்வர் ஸ்டாலினின் கீழ் இருந்தாலும் காவல்துறையினரின் நடவடிக்கைகளைப் பார்க்கும் போது அவர்கள் காக்கி உடையும் காவி மனமும் கொண்டவர்களாகவே உள்ளனர். அதனால்தான் காந்தியைக் கொன்றவன் கோட்சே என்று கூட சொல்லக் கூடாது என்கிறார்கள் காவல் அதிகாரிகள். சாத்தான் குளத்தில் தந்தை மகன் காவல்நிலையத்தில் வைத்து அநியாயமாக அடித்துக் கொல்லப்பட்டார்கள். அது போன்ற நிகழ்வுகள் நாள்தோறும் நடந்து கொண்டிருக்கின்றன. திருநெல்வேலி மாவட்டம் அம்பாசமுத்திரம் கூடுதல் காவல்துறை கண்காணிப்பாளராக இருந்த பல்வீர் சிங், விசாரிப்பதாகச் சொல்லிக் கொண்டு அவர்களின் பல்லை கட்டிங் பிளயர் கொண்டு உடைத்துள்ளார். சிலரின் விரையை நெருக்கித் துன்புறுத்தியுள்ளார். சுமார் 40 பேர்களை அவ்வாறு செய்திருப்பார் என்று தகவல்கள் கூறுகின்றன. ஆனால், இது உளவுத் துறையின் மூலம் நன்கு தெரிந்து இருந்தும் உயர் அதிகாரிகள் யாரும் அவர் மீது நடவடிக்கை எடுக்க வில்லை. பிரச்சனை வலைத் தளங்களில் வெளி வந்து போராட்டங்கள் நடந்த பின்புதான் தற்காலிகப் பணி நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார். மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளரும் காத்திருப்போர் பட்டியலுக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளார். ஆனால், பாதிக்கப்பட்டவர்களை மிரட்டுவதும் பணத்தைக் கொடுத்து அவர்கள் குளியல் அறையில் வழுக்கி விழுந்து பல்லை உடைத்துக் கொண்டதாக சொல்ல வைப்பதும் நடக்கின்றது. பல்வீர் சிங் அம்பையில் பணியில் சேர்ந்து 6 மாதங்கள்தான் ஆகிறது. அதற்குள் இங்கு குற்றங்கள் குறைந்துள்ளது என்றும் அவர் கிரிமினல்களிடம்தான் அவ்வாறு நடத்து கொண்டார் என்றும் அவரை மீண்டும் பணியமர்த்த வேண்டும் என்றும் பிரச்சாரங்கள் திட்டமிட்டு கட்டமைக்கப் படுகின்றன. இதுபோன்று மனித உரிமை மீறலில் ஈடுபட்ட அதிகாரிகளை பணி நீக்கம் செய்து விட்டு, பணியில் இருக்கும் நீதிபதிகள் கொண்டு விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும். அது மட்டுமின்றி, அவருக்கு துணையாக இருந்த காவல் உயர் அதிகாரிகள், காவல் நிலைய அதிகாரிகள் மற்றும் காவலர்கள் அனைவர் மீதும் குற்ற வழக்கு பதிவு செய்யப்பட வேண்டும் என்று இடதுசாரி முற்போக்கு ஜனநாயக சக்திகள் தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டுவருகிறார்கள்.

ஒப்புக்காக நடவடிக்கைகள் எடுப்பதும் குற்றவாளிகள் எல்லாம் ஆட்சியாளர்களால் காப்பாற்றப்படுவதும் நடக்கும்போது வைக்கம் போராட்டம், சமூக நீதி, மனித நேயம் பேசுவது மக்களை ஏமாற்றும் செயலாகாதா? ❑

# அகில இந்திய விவசாயிகள் மகாசபை
# தமிழ்நாடு மாநில ஊழியர் கூட்டம்




*அகில இந்திய விவசாயிகள் மகாசபை தமிழ்நாடு மாநில ஊழியர் கூட்டம், 2.4.23 அன்று, திருவண்ணாமலை மாவட்டம் காஞ்சியில் நடைபெற்றது. சேலம், திண்டுகல், திருவண்ணாமலை, தஞ்சாவூர், புதுக்கோட்டை, வேலூர், கள்ளக்குறிச்சி, மதுரை, தென்காசி, கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் இருந்து சுமார் 50 ஊழியர்கள் கலந்து கொண்டனர். தியாகிகளுக்கு அஞ்சலி செலுத்தி கூட்டம் துவங்கியது. தோழர். ஜெகன் வரவேற்புரை வழங்கினார். தோழர். ஜெகதீஸ் குமார் தலைமை தாங்கினார். கட்சி மாநில செயலாளர் பழ.ஆசைத்தம்பி துவக்கவுரை ஆற்றினார். ஏஐகேஎம் தேசிய மாநாடு மற்றும் புனா தேசிய செயற்குழு அறிக்கையை விளக்கியும், தமிழ்நாட்டில் நமக்கு முன்னுள்ள சவால்கள் பற்றியும் ஏஐகேஎம் மாநில செயலாளர் சந்திரமோகன் விளக்கவுரை ஆற்றினார். அதற்குப் பிறகு, மாவட்ட வாரியாக 20 க்கும் மேற்பட்ட தோழர்கள் மாவட்ட வேலை அறிக்கைகளையும், கருத்துக்களை பகிர்ந்து கொண்டனர். அவற்றை தொகுத்து மத்திய கமிட்டி உறுப்பினர் தோழர். பாலசுந்தரம் பேசியபோது, விவசாயிகள் இயக்கம் கட்டுவதில் ஊழியர்கள் மத்தியில் நிலவிய பல்வேறு வேறுபாடுகளைச் சுட்டிக் காட்டி, விவசாயிகளை அமைப்பு ரீதியாக மட்டுமல்லாமல் அரசியல் கருத்தியல் ரீதியாக வளர்த்து எடுப்பதோடு அமைப்பாக்கும் சவால்களையும் சுட்டிக் காட்டினார் ; அமைப்பு ரீதியான ஆலோசனைகளையும் தெரிவித்தார். அதனடிப்படையில் தொடர்ந்து பேசிய மாநில செயலாளர் சந்திரமோகன், மாநில வேலை திட்டம் மற்றும் 17 பேர் கொண்ட விரிவுபடுத்தப்பட்ட மாநில கமிட்டிக்கானப் பரிந்துரையை விளக்கிப் பேசினார்; ஒருமனதாக கூட்டம் ஏற்றுக்கொண்டது. தோழர். அய்யந்துரை தீர்மானங்கள் முன்மொழிய கூட்டம் ஏற்றுக் கொண்டு நிறைவேற்றியது.*

தொடர்ந்து மாநில ஊழியர் கூட்டத்தில்,

*1) மோடி அரசின் கார்ப்பரேட் முதலாளித்துவ ஆதரவு 3 வேளாண் சட்டங்களுக்கு எதிராக நடைபெற்ற வரலாற்று சிறப்புமிக்க விவசாயிகள் போராட்டத்தில், எஸ்கேஎம் ஐக்கிய விவசாயிகள் முன்னணி போராட்ட கமிட்டிக்கு ஒன்றிய அரசு கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றாமல் ஏமாற்றி வருவதை வன்மையாக கண்டிப்பதுடன், வாக்குறுதிகளை உடனடியாக நிறைவேற்ற வேண்டும்*

*2) 'வேளாண் விளைபொருள்களுக்கு குறைந்தபட்ச ஆதார விலையாக சி2+ 50% என்பதை நிர்ணயம் செய்ய வேண்டும்' என்ற எம்.எஸ். சுவாமிநாதன் கமிட்டி பரிந்துரையை நடைமுறைப் படுத்துவதற்கான சட்டபூர்வமான, நிர்வாக ரீதியான நடவடிக்கைகளை ஒன்றிய அரசு மேற்கொள்ள வேண்டும் எனவும், மின்சார திருத்த மசோதா மற்றும் சுற்றுச்சூழல் விரோத சட்ட திருத்தங்களை கைவிட வேண்டும்*

*3) ஒன்றிய மோடி அரசாங்கம் தமிழ்நாட்டில் திணிக்க விரும்பும் எட்டு வழிச்சாலை, ஹைட்ரோ கார்பன் போன்ற கார்ப்பரேட் ஆதரவு திட்டங்களுக்கு தமிழ்நாடு அரசாங்கம் ஆதரவு அளிக்க கூடாது என்றும் கடந்த சட்டமன்ற தேர்தலில் திமுக கட்சி கொடுத்த வாக்குறுதிகளை திமுக அரசாங்கம் நிறைவேற்ற வேண்டும் என்றும், தமிழ்நாட்டில் புதிது புதிதாக வர முயற்சிக்கும் சுற்றுச்சூழல் விரோத, விவசாயிகள் விரோத நாசகரமான ஆலைகள் மற்றும் திட்டங்களுக்கு திமுக அரசாங்கம் அனுமதி அளிக்க கூடாது உள்ளிட்ட பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.* ❑

MALAE THEEPORI. Registered with Registrar of NewsPaper for India TN/TAM/2002/12013
Posted on 05.04.2023 at Egmore RMS/1 Patrika Channel Regn No:TN/CCN/368/2021-2023
Published on 1st and 16th of every month R.DIS: 2804/17 Licensed to Post WPP TN/PMG/(CCR)/WPP-436/2021-2023

**இராகுல் காந்தியின் பதவி பறிப்பு கண்டித்து சென்னையில் 29.3.2023 அன்று விசிக நடத்திய ஆர்ப்பாட்டத்தில் இகக(மாலெ) மாநிலச் செயலாளர் தோழர் பழ.ஆசைத்தம்பி உரையாற்றினார்**




**அதானி மடியில் அமர்ந்திருக்கும் மோடி அரசைக் கண்டித்து பாட்னாவில் நடைபெற்ற அனைத்திந்திய விவசாய கிராமப்புற தொழிலாளர் சங்கம் நடத்திய பேரணி - ஆர்ப்பாட்டம்**




Owned and Published bys; S.Balasundaram from 1/10, 11th street, Karunanidhi Nagar, Ayanavaram, Chennai - 600023
Printed by R.Murugan at Print Point, 10, Pulipone Bazar 2nd Lane, Triplicane, Chennai - 600005. Editor G.Ramesh